விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (05.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

## கமரூன் பயணத்தை நிறுத்த லண்டனில் உண்ணாவிரதம்

### வெற்றியளிக்கும் என நம்பிக்கை

**இலங்கையில் இம்மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டிற்கு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் செல்லக்கூடாது என்னும் கோரிக்கையை முன்வைத்து தமிழர் ஒருவர் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்துள்ளார்.**

**லண்டனைச் சேர்ந்த பரமேஸ்வரன் என்பவரே உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.**

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் வாசஸ்தலமான நம்பர் 10 டவுனிங் வீதி முன்பாக அவர் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

2009ம் ஆண்டு இலங்கையில் போர் உக்கிரமடைந்த வேளை லண்டனில் பரமேஸ்வரன் உண்ணாவிரதம் இருந்தார்.

அது பெரும் எழுச்சியாக உருவெடுத்தது. அதுபோல லண்டனில் உள்ள அனைத்து தமிழர்களையும் ஒன்று திரட்டி, பாரிய போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க இது மீண்டும் வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனில் சுமார் 4 லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள். பல மாகாணங்களில், எம்.பிக்களை தெரிவு செய்வதில் அவர்கள் உதவி கட்சிகளுக்கு அவசியமாகிறது.

இந்நிலையில் டேவிட் கமரூன் தமிழர்களைப் புறக்கணித்து இலங்கை

20ம் பக்கம் பார்க்க

## வீடழிப்புக்கு எதிராக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தியும் உயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தினரால் வேலி போடப்பட்டுள்ள பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வீடழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்பாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வலி வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் அறிவித்துள்ளார்.

இதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மாகாணசபை உறுப்பினர்களையும், பிரதேச மற்றும் நகர சபைகளின் உறுப்பினர்களையும் வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பொது மக்களையும் பங்கு கொண்டு மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.(எ-6)

## நெருக்கடியில் புதுடில்லி

விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா, இலங்கைப் படையினரால் பிடிக்கப்பட்டு, கொல்லப்பட்டது தொடர்பான காணொளி புதுடெல்லிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே கொழும்பில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரமும், கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசனும் வலியுறுத்தியிருந்தனர்.

இந்தநிலையில், சனல் 4 வெளியிட்ட இசைப்பிரியா தொடர்பான காணொளி, மத்திய அமைச்சரவைக்குள் வலுவான பிளவை ஏற்படுத்தியுள்ளது.

பொதுநலவாய மாநாட்டுக்கு பிரதமர மன்மோகன்சிங் செல்லக் கூடாது என்று பாதுகாப்பு அமைச் சர் ஏ.கே அன்ரனியும், சுற்றுச் சூழல்துறை ஜெயந்தி நடராஜனும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய அமைச்சரவைக்குள் செல்வாக்குமிக்க அமைச்சர்கள், மன்மோகன்சிங்கின் கொழும்பு பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால்,

19ம் பக்கம் பார்க்க

## ஐ.தே.கவின் தேசிய தலைவர் ரணில் தலைமைக்குழுவுக்கு கரு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதேவேளை கட்சியின் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரங்கள் தலைமைத்துவ குழுவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதன்படி தலைமைத்துவக் குழுவுக்கு கரு ஜெயசூரிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

20ம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரதமர் இலங்கைவர அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

### விமானத்தில் ஏறுவது மட்டுமே முடிவு இல்லை

கொழும்பில் இம்மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்காத நிலையில், அவர் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் முடிவு எடுத்தால், அவர் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.


இது தொடர்பில் இவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகையில், "இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ள இந்தியப் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பில் இரு குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்து முன்னேற்பாடுகளை செய்துள்ளன. இவர்கள் கொழும்பில் தங்குவதற்கான விடுதிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், இம்மாநாட்டில் பங்கேற்பதற்கு விமானத்தில் ஏறுவது தொடர்பிலான இறுதி அழைப்பை இந்திய அரசாங்கம் விடுக்க வேண்டியதுதான் எஞ்சியுள்ளது" எனத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இம்மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ள வேண்டும் எனவும், இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய வேண்டிய தேவை இருப்பதாகவும் இந்திய வெளி

20ம் பக்கம் பார்க்க

## இலங்கையுடன் இணைவதற்கு கமலேஸ் சர்மா விருப்பம்



மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்துக்காக இலங்கையையும் சேர்த்துச் செல்வதில் தாங்கள் அக்கறையாக இருப்பதாக பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலர் கமலேஷ் சர்மா கூறுகிறார்.

அத்துடன், இலங்கைப்

02ம் பக்கம் பார்க்க

## காணொளிக் காட்சி உண்மையானால் சுதந்திர விசாரணை அவசியம்

### ஹெல உறுமய வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை மீது போர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, ஒளிபரப்பட்ட சனல் 4 தொலைக்காட்சியின் புதிய காணொளி உண்மையானது என்றால் மட்டும் அது பற்றி சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இந்த காணொளி சம்பந்தமான சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடும் போதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தான் எமக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இணக்கப்பாடுகள் உள்ளன.

ஏனைய எந்த விடயங்கள் தொடர்பில் பரஸ்பர நிலைப்பாடுகள் இருக்க முடியும். அத்துடன் ஈ.பி.டி.பிக்கும் எமக்கும் இடையிலான நிலைப்பாட்டில் பாரிய வித்தியாசங்கள் இல்லை.

20ம் பக்கம் பார்க்க

## வலி வடக்கில் வீடுகள் அழிப்பு அரச அதிபரிடம் தகவல்கள் இல்லை

### அரசியல் விடயங்களில் அதிகாரிகள் தலையிட முடியாதாம்



யாழ்.வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரால் தமிழ்மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவது தொடர்பில் எந்த விதமான தகவல்களும் தன்னிடம் இல்லையெனவும் வீடழிப்பு தொடர்பாக இதுவரை எந்தவிதமான அறிவிப்புகளும் தனக்கு வழங்கப்படவில்லை என்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதுவரையில் தனக்கு அறிவிக்கப்பட வில்லையென

19ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்!

# மாத்தளையில் மீட்ட எலும்புகள் ஆய்வுக்காக சீனாவுக்கு

(கொழும்பு)

நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மாத்தளை மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளின் பகுதிகள் சீனாவின் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பக் கூடாது என மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டனர்.

மீட்கப்பட்ட எலும்புகளின் மாதிரிகள் சீனாவின் ஆய்வுக் கூடத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கும் புலனாய்வுப் பிரிவினரின் தீர்மானத்திற்கு சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

மாத்தளை மேலதிக நீதவான் சம்பத் கமகே முன்னிலையில், மாத்தளை மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மனித புதைக் குழியில் புதைக்கப் பட்டதாக கூறப்படும் 1988-ம், 89 ஆம் ஆண்டுகளில் வன் செயல் காலத்தில் காணாமல் போக செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

உறவினர்களின் உரிமைகளுக்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சத்திய கடிதங்களை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வாக்கு மூலங்களை பதிவுசெய்ய நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பண்டாரவளையில் பஸ் விபத்து; 11 பேர் பலி; 26 பேர் படுகாயம்

(பண்டாரவளை)

பண்டாரவளையிலிருந்து பூணாகலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இதுவரை 11 பேர் பலியானதுடன் 26இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அஜித் ரோஹன தெரிவித்தார்.

பலியானவர்களில் மூவர் பெண்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலநிலைச் சீர்கேடு மற்றும் பள்ளத்தின் நிலைமையை கவனத்தில் கொள்ளும்போது காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் காயமடைந்தவர்களை தேடிக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மீட்பு பணிகளில் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-11)

# பேரறிவாளனின் தாயார் கைது

சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு மாணவர் கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கு பெறக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். பேரணியை ஆரம்பித்து வைத்த அற்புதம்மாள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் திடீரென்று அந்த மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் பேரணியாக தஞ்சாவூருக்கு செல்ல முயன்றனர்.

இதற்காக பேரணியை தொடங்கி வைக்க ராஜீவ்காந்தி கொலையில் கைதாகி சிறையிலுள்ள பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் அங்கு வந்திருந்தார்.

உடனடியாக பொலிஸார் அற்புதம்மாள், மாணவர் கூட்ட மைப்பை சேர்ந்த கார்த்திக், திருமலை உள்பட 14 பேரை திருவல்லிக் கேணி பொலிஸார் கைது செய்தனர். (எ-11)

# மின் தடைப்பட்டால் அறிவிக்கலாம்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் மழைக் காலங்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரம் முறிந்து மின்சார கம்பியில் விழுதல், மின்சார கம்பியில் பட்டம் சிக்குதல் போன்ற காரணங்களினாலேயே மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாக வடமராட்சி மின்சார சபையின் நெல்லியடி அத்தியட்சகர் எ.ராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே மின்சாரம் இவ்வாறு தடைப்படும் சந்தர்ப்பத்தில் 021 226 3257, 021 320 5006 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (எ-24)


## வான், கார் வாடகைக்கு

நாளாந்த, கிழமை கணக்கில் சாரதியுடன் நியாய வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0776237956

(4423)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் வெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5310)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

04.11.2013 முதல் 10.11.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-5323)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா செல்லம்மா



புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா செல்லம்மா (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் (சிங்கப்பூர் போசனசாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் ஜெயலக்ஷ்மி மற்றும் குணரத்தினம் (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி), கோணேஸ்வரி (ஜேர்மனி), பிறேமகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை (திருநெல்வேலி), கிருபானந்தர் (ஜேர்மனி), தனலக்ஷ்மி (ஜேர்மனி), விஜயராசா (ஜேர்மனி), புலேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற வெற்றிவேல் (ஜேர்மனி) மற்றும் யோகசுந்தரம் (ஜேர்மனி), சிவாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.11.2013) புதன்கிழமை 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(4419)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

## 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் திருத்தம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 23.10.2013ம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட 2014ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8031000.00 | |
| 2 | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 981200.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 01 | 1000.00 | 10000.00 | 495000.00 | 250.00 |
| 4 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 39700.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல.05 | 1000.00 | 10000.00 | 1221000.00 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல. 07 | 750.00 | 7500.00 | 165600.00 | 250.00 |
| 7 | பொதுமலசலகூடம் (சுன்னாகம் பஸ் தரிப்பிடத்திற்கு அருகாமை) | 750.00 | 7500.00 | 36 300.00 | |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 24.10.2013 - 14.11.2013 பி.ப. 2.00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 15.11.2013 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் 15.11.2013 பி.ப. 2.00 மணிக்கு

மேலதிகமான விபரங்களை 23.10.2013ம் திகதிய தினக்குரல், உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பார்வையிடலாம்.

தி.பிரகாஷ்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(சி-5376)

# இலங்கையுடன்...

போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஒரு நம்பகத்தன்மை மிக்க சர்வதேச விசாரணை தேவை என்று ஐ நா கூறியிருப்பது யதார்த்தத்துக்கு பொருந்தாத ஒரு விடயம் என்றும் கூறியுள்ள பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலரான கமலேஷ் சர்மா, அது குறித்து தமக்கு நிலைப்பாடு எதுவும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச விசாரணைகளை நடத்த அழைப்பு விடுப்பதற்கு பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ் சர்மா மறுப்பு வெளியிட்டுள்ளார்.

இது நடைமுறைக்கு சாத்தியமற்ற செயல் என்பதால் பொதுநலவாய அமைப்பு அதற்கு இணங்காது என்றும் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அத்துடன் எதிர்வரும் பொதுநலவாய கொழும்பு மாநாடும் ஏனைய மாநாடுகளைப் போன்றே நடைபெறும் என்று சர்மா குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இன்று ஒரு தகவல்

## பிறருக்காக

கனாதர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் உபதேசம் பெறுவதற்காக பலர் வருவதுண்டு.

ஒரு நாள் அவரைத்தேடி நான்கு பேர் வந்தார்கள். முனிவர் அவர்களைப் பார்த்து "நாளைக்குக் காலையில் சூரியன் உதயமாகும் சமயத்தில் இங்கே வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மறுபடியும் அடுத்தநாள் காலையில் அவர்கள் வந்தார்கள். அந்த சமயத்தில் முனிவர் யாகம் செய்து கொண்டிருந்தார். வந்த நான்குபேரும் அவருக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்கள்.

யாகம் முடிவதற்கு அதிக நேரம் ஆகிவிட்டபடியினால் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வரலாம் என்று நினைத்து புறப்பட்டார்கள்.

இதைக்கண்ட முனிவர் அவர்களைத் தடுத்து, "நீங்கள் உடனே ஆச்சிரமத்துக்குப் போங்கள். அங்கேயே உங்கள் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றார்.

இதைக் கேட்டவுடன் அவர்கள் ஆச்சிரமத்துக்குப் போனார்கள். அங்கே ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதில் கை, கால் கழுவிவிட்டு உள்ளே நுழையப் போனார்கள்.

அந்த சமயம் பார்த்து, நான்கு முரடர்கள் அவர்கள் முன்வந்து "இங்கு சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. இதோ இந்த மூங்கில் கம்புகளை உங்கள் கைகளில் கட்டி விடுவோம்.

அதற்கு நீங்கள் சம்மதிக்கவில்லையானால் உங்களை கொன்று விடுவோம்" என்று பயமுறுத்தி அவர்களின் கையை நீட்டச் சொல்லி முழங்கையை மடக்க முடியாதவாறு மூங்கில் கம்புகளை வைத்து கட்டினார்கள்.

இவர்களுக்கு நீட்டிய கையை மடக்க முடியவில்லை. அப்படியே உள்ளே போய் நான்கு இலைகளுக்கும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தனர். இருந்தாலும் சப்பிட முடியவில்லை.

இந்த சமயத்தில் முனிவர் உள்ளே வந்தார். "ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? கூச்சப்படாமல் சாப்பிடுங்கள்" என்றார். இவர்களுக்கோ எரிச்சல் எரிச்சலாக வந்தது.

முனிவர் சிரித்துக்கொண்டே அவர்களைப் பார்த்து, "உங்கள் கையிலுள்ள ஆகாரம் உங்கள் வாய்க்குத்தான் போக வேண்டும் என்று அவசியமில்லை. எதிரில் உட்கார்ந்திருப்பவர் வாய்க்கும் போகலாமே! அதே மாதிரி எதிரில் உட்கார்ந்திருப்பவர் கையில் இருக்கும் ஆகாரம் உங்கள் வாய்க்கும் போகலாமே!" என்றார்.

அப்பொழுதுதான் இவர்களுக்குப் புத்திவந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவன் உண்பதற்கு அது உபயோகப்படுமே! என்பது புரிந்தது.

பிறகு முனிவர், "உங்களுக்குப் பாடம் கற்பிக்கவே இப்படிச் செய்தேன். நாம் சம்பாதிக்கும் பணம் நமக்குத் தான் பயன்படவேண்டும் என்பதில்லை. மாறாக அது மற்றவர்களுக்கும் உபயோகப்படலாம். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதுதான் வாழ்க்கை.

அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி முழங்கையைக்கட்டி உங்களை சாப்பாட்டுக்கு முன் உட்காரவைத்தேன்" என்றார் முனிவர்.

இதை ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கும் நம்ம ஆள் ஒருவரிடம் சொன்னேன்.

அதற்கு அவர், "சார்... எனக்கெல்லாம் கையில் மூங்கில் கம்பு வைத்து கட்ட வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

ஏனென்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை!" என்றார்.

"அது எப்படி?" என்று கேட்டேன். "நான் எப்பொழுதும் அடுத்தவர்கள் பையில் இருக்கிற பணத்தைத் தான் எடுக்கிறது வழக்கம்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்தியாவின் செவிட்டு செவிகளை வன்முறை மூலமே திறக்கமுடியும்

## சீமான் ஆவேசம்

இசைப்பிரியாவுக்கு இலங்கை அரசு இழைத்த கொடூரச் செயல் வெளியாகியுள்ள நிலையில், திராவிடர் விடுதலைக் கழகத்தலைவர் கொளத்தூர் மணிகைது செய்யப்பட்டமை வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் சம்பவம் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த மூதலாம் திகதி அன்று சேலம் வணிகவரித்துறை அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டு வீச்சு வழக்கில் திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர் கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும், மனவேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தங்கை இசைப்பிரியாவுக்கு இலங்கை இராணுவத்தினர் இழைத்தகொடூரச் செயல்கள் காணொளி சாட்சியமாக பிரித்தானியசனல்4தொலைக்காட்சிவெளியிட்டு இருப்பதை கண்டு உலகத் தமிழினம்கொதித்து, வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் இச்சூழலில் கொளத்தூர் மணியைதமிழக பொலிஸார்கைதுசெய்திருப்பது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் நிகழ்வாக அமைந்து விட்டது.

பெற்றோல்குண்டுவீச்சுபோன்றவன்முறைசெயல்களைநாம்ஒருபோதும்அதரிக்கவில்லைஆனால்தன்இனம்அழிந்து, தமிழீழம்சுடுகாடாகமாற்றப்பட்ட சூழலில், மனிதத் தன்மையற்ற கொடூரங்களை இழைத்த சிங்கள பேரினவாத அரசினை நியாயப்படுத்தும் முகமாக நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் 8 கோடி தமிழர்கள்வாழும்இந்தியாகலந்துகொள்ளமுடிவு எடுத்திருப்பதாகவருகின்றசெய்திகள் இளைய சமூகத்தினரை வன்முறைப்பாதையில் திருப்புவதற்கான அடிப்படையாக அமைகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக்கட்சியினரும் ஒன்று சேர்த்துகோரிக்கைவிடுத்தும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாகதீர்மாணம் இயற்றப்பட்டும் கூட மத்திய காங்கிரஸ் அரசு தமிழர்களைக் கிள்ளுக்கீரையாக நினைத்து அலட்சியப்படுத்தி வருகிறது.

நாம் கத்திக் கதறினாலும் கேட்காத இந்திய நாட்டின் செவிட்டுச் செவிகளை வன்முறைப் பாதையில் தான் திறக்கலாம் என்றுநம்புகிற அளவிற்கு தமிழின இளையோரை இந்தியப் பெருநாடு விரக்திக்கு ஆளாக்கி இருக்கிறது என்பதை ஆட்சியாளர்களும்,தலைவர்களும்உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் இது.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் கொளத்தூர் மணியின் போராட்டங்களை முடக்கவேண்டும் என்கிற எண்ணத்தில் தான் அவரை அவசர அவசரமாக தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திராவிடர்விடுதலைக்கழகத்தின்தலைவர் கொளத்தூர் மணியை கைது செய்திருக்கிறதமிழக அரசின் நடவடிக்கையை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது என்றும் கூறியுள்ளார். (அ-2)

# நிதியமைச்சர் சிதம்பரம் கோமாவில் இருந்தாரா?

## வைகோ கேள்வி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் செய்திப்பிரிவில் பணியாற்றிய இசைப்பிரியா படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ள மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், கோமாவில் இருந்தாரா என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை நேற்று காலை சந்தித்துப் பேசினார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்;

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு எதேச்சதிகார போக்குடன் நடந்து கொள்கிறது; கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான அமைப்புகள் மீது இது போன்ற அடக்கு முறைகள் தொடருமானால் ஒட்டுமொத்த தமிழர்களின் ஆதரவை இழக்க நேரிடும்.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் இசைப்பிரியா படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இசைப்பிரியா கொல்லப்பட்டது 2008 ஆம் ஆண்டு. ஆனால், இப்போதுதான் சிதம்பரம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அன்றுமுதல் இவர் கோமாவில் இருந்தாரா? அதேபோல, தி.மு.க. தலைவர் கருணாநிதியும், இலங்கையில் 8 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட போது, அவை பழைய புகைப்படங்கள் போல உள்ளதே என்றார்.

ஆனால், அவர் தற்போது இசைப்பிரியா படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கிறார். இவர்களைப் போன்றவர்களின் பேச்சுக்களால் மக்களை ஏமாற்ற முடியாது.

பொதுநலவாய அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழகத்தில் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்களின் போராட்டம் தொடரும் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 140 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 60 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 150 |
| பாகற்காய் | 180 | 110 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 30 | 60 |
| பயற்றங்காய் | 140 | 90 | 80 |
| லீக்ஸ் | 70 | 70 | 90 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 60 |
| போஞ்சி | 140 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35 - 45 |

# இராசி பலன்

05.11.2013

(ஐப்பசி 19, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

துதியை பிற்பகல் 3.46 மணிவரை

அனுசம்முன்னிரவு 10.18 மணிவரை

இராகுகாலம் 3.04-4.34 மணிவரை

சுபநேரம் 10.34-12.04 மணிவரை

**மேடம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, தேகாரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும்.

**இடபம்** நண்பர்களால் நன்மையுண்டு, ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கடகம்** எதிர்கால முன்னேற்றம் கருதி நல்ல முடிவெடுப்பீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, கல்வி நலன் கருதி ஒரு தொகை செலவாகும்.

**சிங்கம்** தாயின் உடல்நலம் சீராகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திசை திருப்பம் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

**துலாம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** இறை நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும், கற்பனை மிகுதியான நாள், சயன சுகக் குறைவான நாள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** இடமாற்றம், ஊர்மாற்றம் செய்யலாமா என்ற எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், அன்பால் சாதித்துக் காட்டுவீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

வளவன்

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(நல்லூர்)

நீர்வேலி பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கையை நாசமாக்கி வருகின்ற கட்டாக்காலிகளின் தொல்லையைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நீர்வேலி வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சு.சுப்பிரமணியம் எச்சரித்துள்ளார்.


தற்போது காலபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இந் நிலையில் நெல்களின் நாற்றுக்களை கட்டாக்காலிகள் நாசமாக்கி விவசாயிகளுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த வருடம் காலபோக நெற்செய்கையும் அதிக மழையினால் அழிவடைந்து போயிற்று. இதனால் இவ் வருட செய்கைக்கான விதை நெல்லை விவசாயிகள் அதிக விலை கொடுத்தே பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறாக பல இலட்சம் ரூபா செலவில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெல்லை கட்டாக்காலிகள் சேதமாக்குவதை தடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி நீர்வேலி வடக்கு விவசாய சம்மேளனத்தினரால் கட்டாக்காலி கால்நடைகளை உரியவர்கள் கட்டி வைத்து வளர்க்க வேண்டும் எனவும் இல்லையெனில் வயல்களுக்குள் நுழைகின்ற கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டு சம்மேளனத்தினரால் ரூபா 5 ஆயிரம் தண்டப் பணமாக அறிவிடப்படுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ-9-134)




# யாழ்.மாவட்ட மக்களுக்கு இன்னும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்

## ஜப்பான் அதிகாரிகளிடம் யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு




**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் வீடுகளின் தேவை அதிகரித்து வருவதாக ஜப்பான் தூதரக அதிகாரிகளிடம் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரை நேற்று முற்பகல் 10 மணியளவில் சந்தித்து கலந்துரையாடிய ஜப்பான் தூதரகத்தின் நிறைவேற்று அதிகாரிகளான ஜி.நாசி, எம்.சினோபு உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழுவினிடம் அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பல ஆயிரக்கணக்கான வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் வீட்டின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இதனைவிடவும் விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட வாழ்வாதாரத் தொழிற்துறைகளை முன்னேற்ற வேண்டிய தேவையும் உள்ளது. இவை தொடர்பாக முன்னதாக நான் ஜப்பான் தூதரகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளிடமும் எடுத்துக் கூறியுள்ளேன்.



இவற்றைவிட மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் சுமார் 2 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் மிகவும் பயனுள்ள தாகவிருக்கின்றது என்றும் அதற்காக ஜப்பான் நாட்டுக்கு தனது நன்றியையும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் யப்பான் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இச் சந்திப்பில் அவர்களிடம் தான் கேட்டறிந்து கொண்டதாகவும் ஜப்பான் நாட்டின் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களின் நிலைப்பாடு குறித்து திருப்தியை தான் அவர்களிடம் தெரிவித்ததாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் தன்னால் விடப்பட்ட கோரிக்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் அறிக்கையொன்றை ஜப்பான் நாட்டுக்கு சமர்ப்பிப்பதற்கெனவே குறித்த அதிகாரிகள் இங்கு வருகை தந்தனர் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிற் டெலி அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சிதம்பர கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பர கல் லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.ராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தி னராக வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் கலந்து கொள்ள வுள்ளார்.

இந்நிகழ்வில் 3 இலட்சம் ரூபா பணப் பரிசு வகுப்புக்களில் உயர் புள்ளி பெற்ற மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.(அ-2)

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை

## பெற்றோர் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப் பகுதியிலுள்ள சில வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் மாணவர்களுக்கு சிகரெட்டுக்களை விற்பனை செய்வதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மாணவர்களுக்கு சிகரெட்டுகள் விநியோகிக்கப்பட்டதை தாம் நேரில் கண்டதாகவும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

21 வயதுக்குட்பட்டவர்கள் புகைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வாறான சம்பவங்கள் நடப்பது மனவருத்தத்தை தருவதாக குறிப்பிடும் பெற்றோர்கள், மாணவர்களை புகைப்பதற்கு தூண்டும் குறித்த வர்த்தகர்கள் தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை யாழ். நகரின் தனியார் கல்வி நிறுவனங்களை அண்டிய பகுதிகளில் போதை வஸ்து பாவனை அதிகரித்திருப்பதாக முன்னதாகவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# கால்நடைகளுக்கு புற்கள் வழங்கல்

(கரணவாய்)

கரவெட்டி கால் நடை வைத்தியசாலையில் இன்று முதல் ஆடு மாடுகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நல்லின புல்லினங்கள் வழங்கப்படவுள்ளன.

சிபோ 3 பிறக்காரியா போன்ற புல்லினங்கள் பேராதனை விவசாய திணைக்களத்திலிருந்து எடுத்துவரப்பட்டுள்ள நிலையில் அவை கால்நடைகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இப்புல்லினங்கள் கால்நடை உரிமையாளர்கள் இன்று முதல் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ள முடியும். (அ-9-60)








யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூற்றாண்டு மலரான வைத்தீஸ்வரம் வெளியீடு இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்: எஸ்.ஆர்.கரன்)

# மாநாட்டில் பங்கேற்றால் காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்படும் நிலை உருவாகும்

## விடுதலைச் சிறுத்தைகள் அறிக்கை

**(சென்னை)**

**காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்க வேண்டும் என்ற முடிவை எடுத்துள்ளனர். இக் குழுவினரின் குறித்த முடிவு தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

எனவே இம்முடிவைக் கைவிட வலியுறுத்தி நேற்று விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளதாக அக் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்க வேண்டும் என்ற முடிவை மேற்கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் உயர்மட்டக் குழுவின் இந்த முடிவு தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசு இம் மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசிய அமைப்புகளும் ஒட்டுமொத்தமாக ஒருமித்த குரலில் வலியுறுத்திவரும் நிலையில், காங்கிரஸ் கட்சி இப்படியொரு முடிவை எடுத்திருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

தமிழக சட்டப்பேரவைத் தீர்மானம் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங்கின் வாக்குறுதி ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசு இம் மாநாட்டில் பங்கேற்காது என்று நம்பிக் கொண்டிருந்தவேளையில், இந்தத் தகவல் ஏமாற்றத்தை அளிக்கிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்களை வஞ்சிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இசைப்பிரியாவை படையினர் திட்டமிட்டுக் கொல்லவில்லை என்று இலங்கை அரசு ஏற்கனவே கூறி வந்த நிலையில், அவர்கள் கூறியது பொய் என்பதை சனல் 4 தொலைக்காட்சி தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசின் உண்மை முகம் அம்பலப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய அரசு குறித்த மாநாட்டில் பங்கேற்குமானால் தமிழ் மக்களின் உணர்வுகளை மேலும் காயப்படுத்துவதோடு போர்க்குற்றங்களை மறைக்கும் இலங்கை அரசை தொடர்ந்து காப்பாற்றி வருவதும் அம்பலமாகும்.

இந்திய அரசு, இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை மறைப்பதற்கும், அவர்களைக் காப்பாற்றுவதற்கும் துணைநிற்குமாயின் அரசியல் வரலாற்றில், எக்காலத்திலும் அழிக்க முடியாத களங்கத்தை காங்கிரஸ் கட்சி சுமக்க வேண்டிவரும் என்பதை விடுதலைச் சிறுத்தைகள் சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன், எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்படும் நிலையும் உருவாகும்.

எனவே, காங்கிரஸ் கட்சியும் தனது முடிவைக் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் இன்று சென்னையில் எனது தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மேலும், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் அடுத்த இரண்டாண்டுகளுக்குரிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில், பொதுநலவாய நாடுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கக் கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக்கொள்கிறது.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக வேண்டுகோள் விடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சமாதான நீதவான்



இன்பர்சிட்டி, பருத்தித்துறையைச் சொந்த இடமாகவும் வல்வெட்டித்துறையைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராஜதுரை வான்மதி அவர்கள் பருத்தித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் திருமதி ஸ்ரீ.நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக உறுதிப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் மயில்வாகனம் இராஜதுரை, இராஜதுரை அழகம்மா ஆகியோரின் புதல்வியாவார்.

இவர் ஏற்கனவே சத்தியம் செய்த மொழிபெயர்ப்பாளராகவும் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையினதும் மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் உயர்தரப் பாடசாலையினதும் பழைய மாணவராவார்.

(சி- 5371)




குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

247 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

**சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை**



இவ்வைத்தியசாலையில் சாதாரண மகப்பேற்றுக்கான சகல வசதிகள் கொண்ட பிரசவ அறை, பிரசவ விடுதி என்பன உள்ளன. மருத்துவ தாதி மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை 24 மணித்தியாலமும் உள்ளது. தேவைப்படுமிடத்து சத்திரசிகிச்சை மகப்பேறும் நடைபெறுகின்றது.

**குழந்தைகளுக்கான பிரிவு**



நொதன் வைத்திசாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் குழந்தைகளுக்கான விஷேட வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

**தீவிர சிகிச்சைப் பிரிவு**



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் வைத்தியசாலையில் மட்டுமே தீவிர சிகிச்சைப் பிரிவு நடைமுறையில் உள்ளது.

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com


## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் 2014 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

04.11.2013 வலம்புரி பத்திரிகையில் வெளியாகிய கேள்வி அறிவித்தலில் உள்ள 2 ஆவது பந்தியின் திருத்தத்தை வாசிக்கவும்.

உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டு பிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா : 35உயரம்: 175cm
தகைமை/தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியர், உடற்பயிற்சி டிப்ளோமா, கணனி / ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் செய்யும் A/L அல்லது அதற்கு மேல் படித்த பெண்
தொ.இ: B/2439

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 3 செவ் 12ல்கி.பா : 11உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc Computer Science / System Engineer
எதிர்பார்ப்பு: பல்கலைக்கழகத்தில் படித்த வேலைசெய்யும் பெண்
தொ.இ: B/2440

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 4 கி.பா : 37
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L / Business (Telephone Shop)
தொ.இ: B/2441

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம் 1 கி.பா : 16
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Q.S, Computer / லண்டன்எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன் - Student Visa)
தொ.இ: B/2443

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 1 சூரி செவ் 5 ல்
க.பா : 23 .5 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L (திருமணம் எழுத்துடன் தடைப்பட்டது)
தொ.இ: G/2517

பிறப்பு: 1987 கிறிஸ்தவம் (RC) (Na)
நட்சத்திரம்: பரணி 3 சூரி செவ் 4 ல்
கி.பா : 15.5 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/2524

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 1கி.பா : 40
உயரம்: 150cm
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உள்நாடு, பட்டதாரி ஆசிரியர் அல்லது அரச உத்தியோகம், சைவ போசனம்
தொ.இ: G/2525

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா : 21.5 உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Com, HNDA / Programme Assistant
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம் (ஆசிரியர் தவிர்ந்த)
தொ.இ: G/2527


சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# ‘அன்புப்பிள்ளைகளே’ சிறுவர் பாடல் வெளியீடு

அகில இலங்கை இளங்கோ கழகத்தினூடாக அண்மையில் **“அன்புப் பிள்ளைகளே”** எனும் சிறுவர் பாடல் நூலும் இறுவெட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

தென்புலோலியூர் பரா. றமேஸ் இப் பாடல்களை எழுதிள்ளார். சிறுவர்கள் பாடி மகிழ்வதற்கு ஏற்ற வகையிலே சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு அன்னை, தந்தை, எங்கள் தமிழ் மொழி, பள்ளிக்கூடம், திருக்குறள், அன்பு, பணிவு, ஒற்றுமை, சுத்தம், கிளி, வயற்காட்சி, வனக் காட்சி உட்பட 25 தலைப்புகளில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

உதாரணமாக பள்ளிக்கூடம் எனும் தலைப்பிலே,

“அள்ளி அள்ளி அறிவை ஊட்டும்
அழகுப் பள்ளிக் கூடமாம்
கள்ளம் கபடம் இன்றி நாங்கள்
கற்கும் பள்ளிக் கூடமாம்”

என எளிய சந்தத்தோடு சிறுவர்கள் மனதில் எளிதில் பதியக்கூடிவாறு பாடப்பட்டுள்ளமையைக் காணலாம். இப்பாடல்கள் ஒவ்வொன்றும் உயர்ந்த விழுமியப்பண்புகளை எடுத்தியப்புகின்றன.

இவ் இருபத்தைந்து பாடல்களும் ஆசிரியர் க.நிமலதாஸின் எழிலுறு ஓவியத்துடன் நூலுருவாக்கப்பட்டுள்ளதோடு சிறப்பான முறையில் இறுவெட்டாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். மண்ணின் அற்புத குரல் வளம் உள்ளவர்களான செல்வி. ஆதித்யா அருணகிரிநாதன் இப் பாடல்களைப் பாட பிரபல இசையமைப்பாளர் கோ.சத்தியன், கலாவித்தகர் சதா.வேல்மாறன் ஆகியோர் இசை அமைத்துள்ளனர். யாழ்ப்பாணம் ஸப்தமி கலையகத்தினர் மிக துல்லியமாக ஒலிப்பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பல்வேறு முன்னணிக் கலைஞர்களையும் ஒருங்கிணைத்து சிறுவர்களுக்கான இம்முயற்சியில் ஈடுபட்ட அகில இலங்கை இளங்கோ கழகத்தினரை குறிப்பாக பரா.றமேஸை பாராட்ட வேண்டும்.

எனினும் இந்நூலின் அளவுத் திட்டம் ஒரு சஞ்சிகை அளவிலும் காட்சிகள் ஒளிப்பதிவினூடாக இறுவெட்டாக்கப்பட்டும் இருந்தால் இவ் வெளியீடு இன்னமும் பெறுமதி உடையதாக இருந்திருக்கும்.

“இப் பாடல்களின் பயன் சிறுவர் கல்விச் சாலைகள், இல்லங்கள்தோறும் சென்றடைவதில் தான் தங்கியுள்ளது.

கல்வித் திணைக்களம் சிறுவர் மொழிப் பாடநூலில், இந்நூலில் உள்ள தேர்ந்த சில பாடல்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என விழைகிறோம்'' எனப் பண்டிதர் வீ.பரந்தாமன் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை முக்கிய பதிவாகும்.

சிறுவர் விழுமியங்கள், மேம்பாடு தொடர்பாக பல்வேறு சிந்தனைகள் எழுந்துள்ள இக்காலத்தில், இதுபோன்ற நூலை, இறுவெட்டை மாணவர்கள் பெறுவதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் வழி செய்ய வேண்டும். மேலும் கல்விச் சாலைகள் மாணவர்களுக்கு பரிசாக வழங்கக் கூடிய வகையிலே இவ் வெளியீடு அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும். இதுபோன்ற அரிய முயற்சிகளில் தென்புலோலியூர் பரா.றமேஸ் மேலும் மேலும் ஈடுபடவேண்டும். சிறுவர் உலகம் இதனூடாகச் சீர்மியம் அடைய வேண்டும்




**கயன்**

# திருமண விருந்தில் துப்பாக்கிச் சூடு; மணமகன் உட்பட 30 பேர் பலி

(நைஜர்)

நைஜீரியாவில் திருமண விருந்தொன்றில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 30 பேர் பலியாகினர்.

நைஜீரியாவில் ‘போஹோ காரம்’ என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர். வடமேற்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ உள்ளிட்ட மாகாணங்களில் இவர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இவர்கள் இப்பகுதியில் வாழும் பொது மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி அவர்களைக் கொன்று குவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் போர்னோ மாகாணத்தில் திருமண விருந்தில் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர் . அப்பொழுது விருந்தில் பங்கேற்றவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிகளாலும் சுட்டுள்ளனர்.

இச்சூட்டு சம்பவத்தில் மணமகன் உட்பட 30 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவம் ஒரு கிராமத்தில் நடந்துள்ளது. இச்சம்பவத்துக்கு போகோ ஹாரம் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.(2)

# எகிப்துக்கு விஜயம் செய்த ஜோன் கெரி

அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஜோன் கெரி எகிப்துக்கு முன்னறிவிப்பு எதுவுமின்றி விஜயமொன்றை மேற் கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா மற்றும் வடஆபிரிக்க நாடுகளுக்கான ஒன்பது நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தின் முதல் கட்டமாக அவர் கெய்ரோவைச் சென்றடைந்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் பதவி கவிழ்க்கப்பட்ட மொஹமட் முர்சிக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்றையதினம் நடைபெற்ற நிலையில், அவரின் இந்த விஜயம் இடம் பெற்றுள்ளது.

நாட்டின் அரசியல் அதிகார மாற்றம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இருதரப்பு உறவுகள் குறித்து இராணுவ பின்புலத்துடனான அரசாங்கத்துடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதனிடையே மொஹமட் முர்சியின் வழக்கு விசாரணைக்கும் ஜோன் கெரியின் விஜயத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மொஹமட் முர்சி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் எகிப்துக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மற்றும் அதன் ஆதரவாளர்களை அடக்கும் செயற்பாடுகளை இடைக்கால உள்விவகார அமைச்சு கட்டுப்படுத்த வேண்டுமென அமெரிக்கா அடிக்கடி வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எகிப்து அவசர நிலை பிரகடனம் அகற்றப்படும்

எகிப்து நாடு முழுவதிலும் தற்போது அமுலில் இருக்கும் அவசர நிலை பிரகடனம் எதிர்வரும் 14ஆம்திகதி முதல், அகற்றப்படும் என்று எகிப்து நாட்டின் இடைக்கால அரசின் துணை பிரதமரும், உயர் கல்வி அமைச்சருமான ஹோசாம் ஈசா தெரிவித்துள்ளார்.

அதேசமயத்தில் அந்நாட்டின் 14 மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டமும் அகற்றப்படும் என்று எகிப்து அமைச்சரவை அறிவித்தது.

அவசர நிலைமை அகற்றப்பட்ட பின்னர் பல்வகை பாதுகாப்பு நடவடிக்கைகள் இயல்பாக செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எகிப்தின் அதிகாரபூர்வ செய்தி ஊடகம் ஒன்றின் இணையத்தளத்தில் வெளியிடப்

# நல்லொழுக்க தின நிகழ்வு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் த.ஜெயராஜா, கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுபச் செல்வன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், றாகம திட்ட முகாமையாளர் ஐ.லோகநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-60)


## Raveens E M C Karaveddy


### Grade 6 Admission 2014 English Medium

| S.No | In No | Sch Mark | Name | Maths | Eng | Total | Rank | Remark |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 178 | S. Abira | 82 | 75 | 157 | 1 | Selected |
| 2 | 23 | 188 | K. Lathursan | 84 | 65 | 149 | 2 | Selected |
| 3 | 24 | 185 | S. Sivanujan | 76 | 73 | 149 | 2 | Selected |
| 4 | 1 | 173 | K. Kathursan | 70 | 63 | 133 | 4 | Selected |
| 5 | 5 | 175 | S. Kamsiha | 58 | 70 | 128 | 5 | Selected |
| 6 | 27 | 176 | P. Ajaana | 68 | 56 | 124 | 6 | Selected |
| 7 | 8 | 171 | R. Nishani | 56 | 62 | 118 | 7 | Selected |
| 8 | 18 | 179 | V. Narththanan | 58 | 57 | 115 | 8 | Selected |
| 9 | 20 | 182 | S. Sanjeevi | 52 | 63 | 115 | 8 | Selected |
| 10 | 25 | 188 | P. Makeerthan | 74 | 38 | 112 | 10 | Selected |
| 11 | 14 | 177 | P. Tiluxiga | 44 | 64 | 108 | 11 | Selected |
| 12 | 9 | 172 | J. Havissh | 58 | 49 | 107 | 12 | Selected |
| 13 | 2 | 162 | S. Suganthan | 52 | 54 | 106 | 13 | Selected |
| 14 | 3 | 179 | M. Mathura | 34 | 71 | 105 | 14 | Considered |
| 15 | 13 | 167 | E. Rajeeban | 68 | 35 | 103 | 15 | Selected |
| 16 | 11 | 170 | N. Priyanka | 58 | 41 | 99 | 16 | Selected |
| 17 | 21 | 170 | J. Kavirash | 58 | 39 | 97 | 17 | Selected |
| 18 | 17 | 161 | T. Thivison | 54 | 39 | 93 | 18 | Selected |
| 19 | 15 | 174 | R. Agithass | 40 | 53 | 93 | 18 | Selected |
| 20 | 6 | 181 | V. Vaitheki | 52 | 38 | 90 | 20 | Selected |
| 21 | 16 | 168 | J. Nithuja | 52 | 36 | 88 | 21 | Selected |
| 22 | 19 | 174 | R. Shalini | 54 | 33 | 87 | 22 | Selected |
| 23 | - | - | K.Jathuriji | 44 | 34 | 78 | 23 | Considered |
| 24 | 28 | 162 | V. Jeiniganth | 58 | 19 | 77 | 24 | |
| 25 | 12 | 172 | M. Saruga | 38 | 39 | 77 | 24 | |
| 26 | 10 | 164 | A. Abinaya | 46 | 28 | 74 | 26 | |
| 27 | 7 | 165 | T. Yakulan | 48 | 22 | 70 | 27 | |
| 28 | 22 | 158 | V. Jathusika | 30 | 38 | 68 | 28 | |
| 29 | 26 | 171 | R. Lathushiyan | 34 | 11 | 45 | 29 | |

(சி- 5372)

Director
P.Easwaranathan B.Sc (Agric) Hons

## உள்ளூராட்சி வாரமும் பரிசளிப்பு விழாவும்



(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையின் உள்ளூராட்சி வாரமும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் நகரசபை செயலாளர் கே. சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, நீண்ட கால நூல் நிலைய வாசகரை கௌரவிக்கும் நிகழ்வு, சிறந்த உணவகங்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-266)

## பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக கடமையாற்றியவர்களுக்கான நிரந்தர நியமனம் இன்று வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மாவட்ட பட்டதாரிகளுக்கு அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் நியமனம் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 3 க்கான நியமனம் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ம-250)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் பெரும் சிரமம்



(கண்டாவளை)

வெளிக்கண்டல் சந்தியில் இருந்து கண்டாவளை நோக்கி செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையினால் இவ் வீதியூடாக பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதி புனரமைக்கப்படாது குண்டும் குழியாக காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை உள்ளது. இவ்வீதியால் தினமும் மாணவர்கள் உட்பட பலரும் பயணம் செய்கின்றனர். எனவே மழைகாலத்திற்கு முன்னர் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

# மருக்காரம்பளை கிராமத்தில் மதுப்பிரியர்களின் தொல்லை

வவுனியா மருக்காரம்பளையில் மது அருந்தியவர்களால் தினமும் அப்பகுதி மக்கள் பல்வேறான தொல்லைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மருக்காரம்பளை மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

மருக்காரம்பளையில் அமைந்துள்ள மதுபானசாலையில் மாலை வேளையில் குழுமி நிற்கும் மதுப்பிரியர்கள் வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதுடன் பெண்கள் நடமாட முடியாத வகையில் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் வெளிப்படுத்துகின்றனர்.

இத்துடன் வாகனங்கள் செல்வதற்கு இடம் விட்டுக் கொடாது வீதியை ஆக்கிரமித்து நிற்பதுடன், மது வகைகளைக் கொள்வனவு செய்து மக்கள் குடியிருப்புகள் உள்ள உள்ளக வீதிகளில் மரங்களின் கீழ் இருந்து அவற்றை அருந்துவதுடன் வெற்றுப் போத்தல்களையும் அங்கேயே உடைத்து விட்டுச் செல்வதனால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை உடைந்த நிலையில் உள்ள போத்தல்களினால் காயங்களுக்கும் உள்ளாகுகின்றனர்.

இத்துடன் கிராமத்து சந்திகளில் நின்றும் தகாத வார்த்தை பிரயோகம் செய்வதால் வீடுகளில் மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் வீதிகளில் அவர்கள் சண்டையிட்டுக் கொள்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக் கிராமத்தில் உள்ள பாடசாலை சுவர்களிலும், பெயர்ப்பலகையிலும் தீய வார்த்தைகளை இவர்கள் எழுதிச் செல்வதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதிலும் இவற்றை அசமந்தப் போக்குடன் வவுனியா பொலிஸார் கண்டு கொள்வதில்லை.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி பொது மக்களின் இயல்பான வாழ்வு நிலைக்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் கோருகின்றனர். (ம-266)

# விவசாயிகளின் காணிகள் சுவீகரிப்பு மாற்றீட்டு காணிகள் வழங்கப்படவில்லை

வவுனியா நகருக்கான குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட பேராறை மறித்து நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட விவசாயிகளின் காணிகளுக்கு இதுவரை மாற்றீடாக காணிகள் வழங்கப்படாத நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரும் கேள்விக் குறியாகியுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் பேராறு திட்டத்திற்காக ஓடாவி சின்னக்குளம், பண்டார பெரியகுளம், கட்டையர்குளம், பறண்நட்டகல், புதுக்குளம் ஆகிய குளங்களும் அவற்றுள் அடங்கும். சுமார் 600 ஏக்கர் வயல் மற்றும் மேட்டுக்காணிகளும் விவசாயிகளிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக மாற்றுக்காணிகள் வழங்குவதாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

எனினும் அணை கட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் காணிகளை இழந்த விவசாயிகளுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படாமையால் தமது பிரதான தொழிலான விவசாயம் பாதிப்படைந்துள்ளதாகவும் இதனால் தமது ஜீவனோபாயத்தை கொண்டு நடத்த முடியாத பெரும் துன்பங்களை தாம் அனுபவித்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 600 ஏக்கர் காணி இத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் 160 ஏக்கர் காணியே சுவீகரிக்கப்படவுள்ளதாக திட்டத்தை வரைந்தவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளமை கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் விவசாயிகளுக்கு தெரியவந்துள்ள நிலையில், காணிகளை இழக்க வேண்டியுள்ளவர்கள் தற்போது மீண்டும் எதிர்ப்பை காட்டத்தொடங்கியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கு விரைவில் மாற்றுக் காணிகளையாவது தர வேண்டும் என்ற கோரிக்கையினையும் வவுனியா மாவட்ட செயலகத்தில் இவ் விவசாயிகள் தற்பொழுது முன்வைத்துள்ளனர். (ம-266)






கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நிலை 15 இற்கு உட்பட்ட மாணவர்கள் அண்மையில் மகரகம இளைஞர் மன்றத்தில் கல்வி அமைச்சரால் கௌரவிக்கப்பட்ட போது... (படம்:- சிவநகர் செய்தியாளர்)

## பொலிஸ் கட்டட திறப்பு விழா

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் பெண்கள், சிறுவர்களுக்காக தனியான அலுவலக கட்டடம் அமைக்கப்பட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தால் 18 இலட்சம் ரூபா செலவில் நன்கொடையாகக் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யு.என்.ஏச்.சி.ஆர் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி கொலம் அப்பாட், முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக ஸ்ரீவர்தன, கிளிநொச்சி யு.என்.ஏச்.சி.ஆர். பிரதிநிதி மரின்ரின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் பெண்கள், சிறுவர்களுக்கான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் இருந்த சிக்கல் நிலை இக்கட்டடத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-7)

## மருத்துவ பரிசோதனை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ பரிசோதனையில் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோர் மட்டுமே பங்குபற்ற முடியும்.

கொழும்பிலிருந்து வரும் விசேட மருத்துவ நிபுணர்கள் 10 பேர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு வருபவர்கள் வழமையான மருத்துவ பரிசோதனைக் கட்டணம் ரூபா 600 ஐக் கொணடுவருதல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)

## வவுனியா பொது நூலகம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபை பொது நூலகம் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் நடத்தப்பட்ட மதிப்பீட்டுக்கமைய அகில இலங்கை ரீதியில் நகரசபை பொது நூலகங்களுக்கிடையில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது.

இதேவேளை 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலகங்கள் வரிசையிலும் இந் நூலகம் தெரிவு செய்யப்பட்டு கடந்த வாரம் கொழும்பு இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற விருது வழங்கல் வைபவத்தில் இரு விருதுகளையும் பெற்றுள்ளது.

இந் நூலகத்திலேயே இலங்கையில் முதன்முறையாக கண்பார்வையற்றோருக்கான நூலகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-266)



# சிறுவர் அரங்கம்

626

## பிராயசித்தம் உண்டா?

குறுஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராம வாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான். பஞ்சாயத்திலும் கிராம வாசிக்கு தண்டனை கிடைத்தது. பின் வீட்டிற்கு வந்த முனுசாமியின் மன சாட்சி அவனை உறுத்தியது. கிராம வாசி மீது தான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத் திற்கு ஏதாவது பிராயசித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயசித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென் றான். "துறவியாரே! நான் இந்த கிரா மத்தில் வசிக்கும் ஒரு கிராமவாசி மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனதை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட் டான். துறவி சிறிது யோசித்து விட்டு, "இன்று இரவு ஐந்து கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராம வாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பி போட்டு விட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்,"" என்று கூறினார்.

முனுசாமியும் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டில் முன் பரப்பி விட்டான். பின் மறுநாள் சென்று துறவியை பார்த்தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந் நேரம்?" என்று கேட்டான். உடனே துறவி, ""முனுசாமி! நீ இப்போது அந்த கிராமவாசி யின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டு முன் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக் கிக் கொண்டு வா," என்று கூறி னார். முனுசாமி மிகுந்த ஆவலு டன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அள்வு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்து போய்விட்டிருந்தது. அதனைக் கண்ட முனுசாமி திடுக்கிட்டான். மீண்டும் துறவி யிடம் ஓடி வந்தான்.

"துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின் முன்னால் போட்டு விட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான். துறவி சிரித்து விட்டு, "முனுசாமி! நீ விரித்துப் போட்டு விட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடி யாதோ, அதே போல நீ ஒருவர் மீது



கூறிய பழியையும் அத னால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வார முடியாத பஞ்சைப் போன் றது தான் உன் பழிச் சொற்களும், அவற் றையும் இனி திருப்பி வார முடியாது. ஆனால், நீ செய்த தவறை எண்ணி மனம் வருந்தினால், அதுவே உன் பாவத்திற்கு தகுந்த பிராயச்சித்தம். உன் பாவங்கள் பஞ்சைப் போலவே பறந்து விடும். எனவே, இறைவனிடம் உன் தவறுக்காக வருந்தி மன்னிப்பு கேள். அதுவே நீ பாவத்திலிருந்து தப்பும் வழி," என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் அவன் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டு விட்டான். நல்லவன் என்று உலகம் அவனை வாழ்த்தியது. பிறர் மீது வீண்பழி சுமத்துவதால் பலன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தான் முனுசாமி. குட்டீஸ்களே! இந்த உலகில் நாம் பிறருக்குத் தரும் துன்பம், பழி இவற்றிலிருந்து மீளவே முடியாது. எனவே, எப்போதும் மற்றவர் களைப் பழி சொல்லும் குணத்தை விட்டு விடுங்கள். அது நல்ல குண மில்லை. புரிகிறதா! ⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙



11.2013

05

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1530-நெதர்லாந்தில் நிகழ்ந்த பெரும் வெள்ளம் றெய்மேர்ஸ்வால் என்ற நகரத்தை அழித்தது.
- 1556-முகலாயப் பேரரசுப் படைகள் இந்தியாவின் சூர் பேரரசின் தளபதி ஹேமு என்பவனின் படைகளை பானிபாட் என்ற இடத்தில் இடம் பெற்ற சமரில் தோற்கடித்தன. பேரரசன் அக்பர் இந்தியாவின் அரசனானான்.
- 1605-றொபேர்ட் கேட்ஸ்பி என்பவரால் லண்டன் நாடாளுமன்றத்தைத் தகர்க்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
- 1757-புருசியா பேரரசன் பிரெடெரிக் பிரான்ஸ் மற்றும் உரோம் பேரரசு ஆகியவற்றின் கூட்டுப் படையை றொஸ்பாக் என்ற இடத்தில் தோற் கடித்தான்.
- 1814-இலங்கையின் வடக்கு மற்றும் வட- மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற பெரும் சுழற் காற்று யாழ்ப்பாணம், விடத்தல் தீவு, மன்னார் ஆகிய இடங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தியது.
- 1831-ஐக்கிய அமெரிக்காவில் அடிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாட் டர்னர் வேர்ஜீனியாவில் குற்ற வாளியாகக் காணப்பட்டு தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது.
- 1861- ஆஸ்திரேலியாவில் மெல்பேர்னில் முதலாவது மெல்பேர்ன் கிண்ணக் குதிரைப் பந்தயப் போட்டி ஆரம்பமாயிற்று.
- 1862-மினசோட்டாவில் 303 டகோட்டா பழங் குடி யினர் வெள்ளையினத்தவரை கொலைசெய்த குற்றத்துக்காக குற்றவாளிகளாகக் காணப் பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1895-தானுந்தின் முதலாவது அமெரிக்கக் காப்புரி மத்தை ஜோர்ஜ் செல்டன் பெற்றார்.
- 1911-செப்ரெம்பர் 29 இல் ஓட்டோமான் பேரரசுடன் இத்தாலி போரை அறிவித்த பின்னர் திரிப் பொலி மற்றும் சிரெனாய்க்கா ஆகியவற்றை இத்தாலி தன்னுடன் இணைத்துக்கொண்டது.
- 1913-ஐக்கிய இராச்சியம் சைபிரசை தன்னுடன் இணைத்துக்கொண்டது.
- 1917-அக்டோபர் புரட்சி:எஸ்தோனியாவில் கம்யூ னிசத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் புரட்சி யாளர்களுக்குத் தலைமை வகித்துச் சென்று அரசைக் கைப்பற்றினார்.
- 1935-மொனோபொலி மட்டை ஆட்டம் முதன் முதலில் பாக்கர் சகோதரர்கள் என்ற நிறு வனத்தினால் வெளியிடப்பட்டது.
- 1940-பிராங்கிளின் ரோசவெல்ட் ஐக்கிய அமெரிக் காவின் அதிபராக மூன்றாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1945-நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தி னர் மீதான வழக்கு விசாரணை டில்லி செங் கோட்டையில் ஆரம்பமானது.
- 1987-தென்னாபிரிக்காவில் 24 ஆண்டுகால சிறைவாசத்தின் பின்னர் கொவான் உம் பெக்கி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
- 1996-பாகிஸ்தான் ஜனாதிபதி பரூக் அகமது கான் பிரதமர் பெனாசீர் பூட்டோ தலைமையிலான அரசைக் கலைத்தார்.
- 2006-148 ஷியா முஸ்லிம்களை 1982 இல் கொன்றதாக தொடரப்பட்ட வழக்கில் இடைக் கால ஈராக் அரசின் சிறப்பு நீதிமன்றம் முன் னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை தீர்ப்பு அளித்தது.

### பிறப்புக்கள்

- 1854-பவுல் செபாடியர், பிரெஞ்சு வேதியியலாளர், வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.1941)
- 1870-சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ.1925)
- 1920-டக்லஸ் நார்த், அமெரிக்க பொருளியலாளர், பொருளியலுக்கான நோபல் நினைவுப் பரிசு வென்றவர்.
- 1948-வில்லியம் டானியல் பிலிப்ஸ், அமெரிக்க இயற்பியலாளர், இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்.
- 1952-வந்தனா சிவா, இந்திய இயற்பியலாளர்.

### இறப்புக்கள்

- 1526-டெல் ஃபெர்ரோ, இத்தாலிய கணிதவியலா ளர் (பி.1465)
- 1879-ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல், ஸ்கொட் லாந்து இயற்பியலாளர் (பி.1831)
- 1930-கிறிச்டியன் ஈஜ்மன், டச்சு இயற்பியலாளர், மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1858)
- 1944-அலெக்சிஸ் காரெல், பிரெஞ்சு மருத்துவர், மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1873)
- 1975-எட்வர்ட் டாட்டம், நோபல் பரிசு பெற்றவர் (பி.1909)

## புத்திசாலிக் கழுதை



ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண்டிருந் தது.

கழுதையை கவனி த்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக் கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந் தது கழுதை.

ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கஷ டம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண் டும் என கழுதை தீர்மா னித்தது.

ஓநாயின் பாய்ச்ச லின் போது சற்று வில கிக் கொண்டு, "ஓநா யாரே, உம்முடைய வலி மையின் முன்னால் நான எம்மாத்திரம்... நான் இன்று உமக்கு இரை யாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க. முடியாது நானும் உம க்கு இரையாகத் தயா ராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விஷயத்தைத் தயவு செய்து கேட்க வேண் டும்," என வேண்டிக் கொண்டது.

"நீ என்ன சொல்ல விரும்பினாய். சொல வதை சீக்கிரம் சொல்". என உறுமியது ஓநாய.

"ஓநாயாரே என் காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான எவ் வளவோ முயற்சி செய்தும் முடிய வில்லை.

காலில் முள் உள்ள நிலையில் நீ என்னை அடித்துச் சாப்பிட்டால் அந் முள் உன் தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமை யான வேதனையைத் தருவதுடன் உன் உயிரையும் வாங்கிவிடும்.

அதற்கு தயவு கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடு. அதற்குப் பிறகு நீ என்னை அடித்துத் தின்பதில் எனக்கு எந்த ஆட்சேப னையும் இல்லை," என கழுதை கூறிற்று.

ஏமாந்த ஓநாய் ஒத்துக் கொண்டது.

கழுதை தனது பின்னாங் கால்களைத் திருப்பிக் காண்பித்து,

ஓநாய் கழுதையின் பின்னங்கால் களில் முள் இருக்கிறதா என தேடும் வேலையில், அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கழுதை பின்னங் கால் களால் ஓநாயைப் பலமாக உதைத்தது.


கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடிதுடித்து சரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.

# பேராசை கொண்ட முட்டாள்கள்!



ஆன்மீகம் 28

எப்பொழுதும் இவ்வுலகம் மிகச்சிறந்த இடமாகத் தான் இருந்திருக்கிறது. இந்த உலகத்தைப் பற்றியோ, மற்றைய கிரகங்களைப் பற்றியோ நமக்குத் தெரிந்த வகையில் மற்ற எல்லா கிரகங்களைக் காட்டிலும் இவ்வுலகமே மிகச்சிறந்த இடமாக இருக்கிறது. பேராசை கொண்டு இந்த முட்டாள்கள் தான், சிறிதும் விழிப்புணர்வு இல்லாமல் மனித குலத்திற்கு நன்மை பயக்கும் என எண்ணிக்கொண்டு, மற்றைய அனைத்து உயிர்களையும் கொன்று குவித்துக் கொண்டே இருந்தார்கள். ஆனாலும், அந்த மனித குல நன்மை என்பது இன்றளவும் ஒரு கனவாகவே இருக்கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மற்ற உயிர்களைப் படுகொலை செய்த பிறகும் பல



மனிதப் படுகொலைகளுக்குப் பிறகும் மனித குல நன்மை என்பது இன்னும் தொலை தூரத்திலேயே உள்ளது. மனிதன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுபிட்சமாக இருந்த அளவுக்கு இப்பொழுது இல்லை. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் மூலம் நம் வெளிப்புறச் சூழ்நிலையை மிக அதிகமாக மாற்றயிருக்கிறோம். இருந்தும் மனிதகுல நன்மை அல்லது சுபிட்சத்தின் அருகில் நாம் இல்லை.

ஆகவே, மனித குல நன்மைக்கு என்ன செய்யவேண்டும் எனக் கண்டுகொள்ள வேண்டும். உங்கள் உள்தன்மை மாறினால் தான் உண்மையான நலம் ஏற்படும் என்பதை உங்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்து நீங்கள் உணர முடியும். தற்பொழுது ,உங்கள் வாழ்க்கையின் தரத்தை, நீங்கள் அணியும் உடையோ, உங்கள் கல்வித் தகுதியோ அல்லது உங்கள் குடும்பப் பின்னணியோ, வங்கிக் கையிருப்போ நிர்ணயிப்பதில்லை. இந்தக் கணத்தில் நீங்கள் உங்களுக்குள் எந்த அளவுக்கு அமைதியாவும், ஆனந்தமாகவும் இருக்கிறீர்களோ அதுமட்டும் தான், உங்கள் வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கிறது.

ஆகவே, யோகாவும் தியானமும் உங்கள் உள்தன்மையை கையாளுகின்ற அறிவியலின் ஒரு பரிமாணம் ஆகும். இங்கு நீங்கள் வாழ்க்கையை அமைதியாகவும், ஆனந்தமாகவும் வாழ்வதற்குரிய சரியா்ன உட்புறச் சூழலை உருவாக்குவதே அதன் முக்கிய நோக்கம். வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் மிகவும் நன்றாக வாழ முடியும். நீங்கள் அன்பாகவும், ஆனந்தமாகவும் மாறிவிட்டால் சுபிட்சமடைந்து விட்டதாக கருதுவீர்களா?

ஆகவே, யோகா மற்றும் தியானம் என்று சொல்வது சரியல்ல. யோகா என எதைச் சொல்கிறீர்களோ அதில்தியானமும் அடங்கியுள்ளது. முன்பு எப்போதும் இருந்ததை விட இந்தக் காலகட்டத்தில் யோகா அதிகமான முக்கியத்துவம் பெறுகிறது. இன்று உலகில் பல செயல்களைச் செய்வதற்குச் சக்தி வாய்ந்த கருவிகளைக் கொண்டுள்ளோம். நவீன தொழில்நுட்பத்தின் உதவியால் நீங்கள் விரும்பினால், மலையை நாளையே தரைமட்டமாக்க முடியும்.

இந்த மாதிரியான ஒரு சக்தி நம் கையில் இருக்கும்பொழுது உள்நிலை புத்திசாலித்தனமும் வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வும் மற்றைய உயிரினங்களை நமக்குள் ஒரு பாகமாக உணருகிற தன்மையும் நமக்கு இருப்பது மிக மிக அவசியமாகிறது. இல்லையெனில் உங்களுக்கே நீங்கள் மிகப்பெரிய சேதத்தை விளைவித்துக் கொள்வீர்கள். அந்த மாதிரியான ஒரு நேரத்தில் தான் இப்பொழுதும் இருக்கிறீர்கள்.


சுவாசிப்பதே பிரச்சினையாகும் அளவிற்கு, நீங்கள் சேதத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இன்று, இந்த உலகத்தில் உயிர்வாழ்வதே பிரச்சினையாக ஆகிக் கொண்டிருக்கிறது. வெளிப்புற அறிவியலைச் செயல்படுத்தியதால் மட்டுமே இந்த மாதிரி நடந்திருக்கிறது. சரியான உள் சூழ்நிலை உருவாக்கக் கூடிய உள்நிலை அறிவியலை நீங்கள் கவனிக்கவேயில்லை. ஆகவே, நீங்கள் சக்தி வாய்ந்தவர்களாக இருப்பதால், யோக அறிவியல்தான் முன்பு எப்போதையும் விட இக்காலகட்டத்திற்கு மிகவும் தேவையாக இருக்கிறது. நீங்கள் இதய சுத்தியுடன் இருப்பதால், நீங்கள் புத்திசாலித்தனமாக இருப்பது மிகவும் முக்கியமாகிறது.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-

# இனவாத பாசிஸ்டுகளுக்கு எதிராக, கிரீசில் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம்

உலக வங்கியின் ஆணைக்கு ஏற்ப மக்கள் நலத்திட்டங்களை வெட்டும் கிரீஸ் அரசைக் கண்டித்து இடதுசாரி அமைப்புகள் நடத்திய போராட்டத்தின் போது, உள்ளே புகுந்து கலவரம் செய்யவதற்காக பொலீஸ் இவர்களுக்கு ஆயுதங்களையும்,ரேடியோ சாதனங்களையும் வழங்கியது, ஏற்கனவே அம்பலமாகி உள்ளது. மக்கள் போராட்டங்களில் புகுந்து கலவரம் செய்வது பொலீஸுடன் சேர்ந்து மக்களை தாக்குவது என இவர்களின் அடாவடி தொடர்கிறது.

பொலீஸுடன் டான் முதலாளிகளுக்கு கூலிப்படையாகவும் செயல்படுகிறது. கை, கால்களை முறிப்பதற்கு 300 யூரோ, மருத்துவமனையில் சேர்க்கும் அளவுக்கு தாக்குவதற்கு ஆயிரத்து 500 யூரோ கொடுத்தால் போதும் என, கட்சி அலுவலகத்தில் வைத்து தாக்க, தனக்கு தொல்லை கொடுப்பவர்களை தாக்குவதற்கு என தன்னிடம் பேரம்பேசப்பட்டதாக ஒரு பெண் பி.பி.சிக்கு கொடுத்த வாக்குமூலத்தில் தெரிவிக்கிறார். அத்துடன் விடயம் வெளியில்தெரிந்தால், உயிருடன் எரித்துவிடுவேன் என மிரட்டியதாகவும் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.




இவர்கள் ஒரு பத்திரிகையாளருக்கு கொலை மிரட்டல் விடுத்ததை அடுத்து வோ்ட் பிரஸ் இணையத்தளம், **கோல்டன் டான்** அமைப்பின் தளத்தை மூடியது. கப்பல் முதலாளிகள், வங்கி முதலாளிகள் ரியல் எஸ்டேட் முதலாளிகளால். கட்டுப்படுத்தப்படும் கிரோக்க ஊடகங்கள் இந்த நவீன பாசிச கட்சிகளை வளர்த்து விடுவதில் முக் கிய பங்காற்றுகின்றன. இந்தக் கட்சியானது 1980 களிலேயே ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் 2009 பாராளுமன்ற தேர்தலில் அது வாங்கிய வாக்கு சதவீதம் 0.29 மட்டுமே என்பதால் நாடாளுமன்றத்துக்கு ஒரு பிரதிநிதியை கூட அனுப்ப முடிவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு பிறகு 2012 தேர்தலில் வாக்கு சதவீதம் 6.97 ஆக உயர்ந்தது. அந்தக் கட்சி 21 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பியது. புலம்பெயர்ந்தவர்கள் வாழும் பிரதேசங்களில் இதன்வாக்கு வீதம் 20 சதவீதத்தை எட்டியுள்ளது. புலம்பெயர் தொழிலாளிகளையும் கிரீஸ் மக்களையும் பிளவுபடுத்தி இதைச் சாதித்துள்ளது.



நியோ நாஜிக் கட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம்

இத்தகைய அடாவடிக் கட்சியானது, தனது ஆயுதப் படைக்கு- அரசின் பயிற்சி, முதலாளிகளின் பணம் மற்றும் ஊடக பலத்தால் செல்வாக்குடன் வளர்ந்து வருவதுடன், புலம் பெயர்ந்தவர்களையும் தொழிலாளர்களையும் குறிவைத்து தாக்கி வருகிறது. தொழிலாளிகள் உரிமை என்று பேசினால், முதலாளிகள், **கோல்டன் டான்** *கட்சிக்கு போன் போடவா* என்று மிரட்டுவதாக தி கார்டியன் தயாரித்துள்ள ஆவணப் படத்தில் தொழிலாளிகள் தெரிவிக்கின்றனர். இந்த ஆவணப்படம் இன்னும் பல உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது. *நாங்கள் பூங்காக்களில், விடுதிகளில், பார்களில் என அனைத்து இடங்களிலும் ஆபத்தாக உணருகிறோம்* என்று இந்த ஆவணப்படத்தில் தெரிவிக்கிறார் ஒரு புலம் பெயர்ந்தவர்.



டி.வி. விவாதத் தின் போது மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை அங்கேயே அடிக்கிறார்கள் இந்தக் கட்சியினர். இவர்கள் பலரும் புலம்பெயர்ந்தவர்களை மட்டுமல்ல கம்யூனிஸ்ட்டுகளையும் மாற்று இனமாக கருதுகின்றனர். தங்கள் கருத்துடன் உடன்படாதவர்களை மாற்று இனத்தவராக முத்திரை குத்துகின்றனர், என்கிறார் **லியானா கனீலி** என்றன கம்யூனிஸ்ட் கட்சி எம்பி.

**கோல்டன் டான்** குறித்து **தி கார்டியனின்** டாக்குமென்டரி, புலம் பெயர்ந்தவர்களை கொள்ளையிடுவது, கம்யூனிஸ்டுகளை தாக்குவது என அதன் அட்டூழியங்கள் தொடர்கின்றன.

இதன் தொடர்ச்சியாவே இந்த பாசிஸ்ட்டுகளை, இசை வழியாக எதிர்த்துப் போராடிய **பாடகர் பாவ்லோஸ்** கொல்லப்பட்டிருக்கிறார். கிரீஸ்போராட்டம் பாவ்லோசின் கொலயை தொடா்ந்து, பாசிஸத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தின் அழுத்தத்தால், அரசு, **கோல்டன் டான்** கட்சியின் தலைவன் மற்றும் எம்.பி.க்களை கைது செய்துள்ளது. இந்த கைதுக்கு எதிராக கோல்டன் டான் உறுப்பினர்கள் அக்டோபர் 26 அன்று பெருந்திரளாக போராட்டம் நடத்தியுள்ளனர். கிரேக்க தெருக்கள் பாசிஸத்துக்கும் அதற்கு எதிரான மக்கள் போராட்டத்துக்குமான களமாக மாறியுள்ளது.

(முற்றும்)

-இணையம்-

# சிறுபான்மை மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் எங்கோ ஓர் இடத்தில் சர்ச்சை நிலவி வருவதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பில் 30 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் இதுவரையில் அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இன விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அனைத்து இன மக்களும் மத வழிபாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் காணப்படுகின்றது. நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளமைக்கு நீதவான்களையோ சட்டத்தரணிகளையோ குற்றம் சுமத்த முடியாது.

வாஸ் குணவர்தனவைப் போன்று பலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்த சிறந்த பொறிமுறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். மேலும் மத முரண்பாடுகள் தொடர்பில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும் சட்டங்கள் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது.

இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க அல்லது பௌத்த மதகுரு ஒருவர் போதைப் பொருள் கடத்தல் அல்லது வேறு குற்றச் செயலில் ஈடுபட்டாராயின் அவருக்குரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும், சமய வழிபாட்டுத் தலங்கள் மீது அல்லது ஓர் குறிப்பிட்ட இனத்தவர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

நாட்டின் சிறுபான்மை சமூகம் தனது பாதுகாப்பற்ற நிலைமையை உணர்கிறது. சிறுபான்மை மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய பின்னணியை அரசாங்கம்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பில் அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு புறம்பானவை.

மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

யுத்தம் நடத்துவதற்காக பொலிஸ் அதிகாரங்களை நாம் கோரவில்லை. நிர்வாக நோக்கங்களுக்காகவே பொலிஸ் அதிகாரங்களைக் கோருகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 7 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இத் திருவிழாவில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வேல் வகுப்பு படித்து வேல் வாங்கும் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு சூரன்போர் திருவிழாவும் மாலை 5.30 மணிக்கு விஸ்வரூப தரிசனமும் நடைபெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருக்கல்யாண திருவிழா இடம்பெறவுள்ளது. (அ-5-7)

## புற்றுநோய் சிகிச்சைக்கு தனியான நிதி ஒதுக்கீடுகள்

நாள்தோறும் 50 முதல் 60 பேர் வரையானோர் புற்று நோயினால் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புற்றுநோயும்தடிமன், இருமலைப் போன்று வியாபித்துள்ளது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு மேலதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.


அதிகமானவர்கள் புகைபிடித்தல் காரணமாக புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு புற்று நோயாளிக்காக அரசாங்கம் 150 இலட்ச ரூபாவை செலவிடுகின்றது.

சில் நோயாளிகளுக்காக வழங்கப்படும் ஒரு ஊசியின் பெறுமதி 4 இலட்ச ரூபாவாகும்.

எனவே, புற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனியான நிதி ஒதுக்கீடுகள் மேற் கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அதிக நீர் பருகுங்கள்...

மழை காலம் ஆரம்பித்து விட்டால் பொதுவாக நாம் உள்ளெடுக்கும் நீரின் அளவைக் குறைத்துக் கொள்வது வழமை




யாகி விட்டது. சுகாதார முறையில் சுட்டாறிய நீர் அருந்த வேண்டியிருப்பதாலும் தாகம் எடுப்பது குறைவாக இருப்பதாலும் இவ்வாறு நம்மில் பலர் மழைகாலத்தில் நீர் அருந்துவதைக் குறைத்துக் கொள்கிறோம்.

இவ்வாறு நாம் அருந்தும் நீரின் அளவைக் குறைத்துக் கொள்வதால் சிறுநீரகக் கல் உருவாகும் ஆபத்து அதிகரிக்கக் கூடும்.

சிறுநீரகத்தில் ஏற்படும் பிரச்சினையில் முக்கியமான ஒன்று சிறுநீரக கல் உருவாகுதலாகும். சிறுநீரில் உள்ள உப்புகள் ஒன்று திரண்டு, கற்களாக உருவெடுக்கின்றன. கல்சியம், மக்னீசியம் ஆகியவற்றின் ஒக்சலேட், பொஸ்பேற் உப்புகளால் இவை உண்டாகின்றன. இது, மிகச் சிறுதுகள் அளவில் உருவாகி, பிறந்த குழந்தையின் தலை அளவிற்குக் கூட வளரக் கூடியதாகும். பெரிய கற்கள் கூட, அறிகுறியை வெளிப்படுத்தாமல் இருக்கும்.

கற்களின் வெளிப்பரப்பு, முட்களைப் போல இருந்தால், அவை சிறுநீர் பாதையில் உராய்வதால், சிறுநீரில் இரத்தம் வெளியாகலாம். இவை பரம்பரை காரணமாகவும், போதிய நீர் குடிக்காமையாலும் உருவாகலாம்.

அசைவ உணவை தவிர்ப்பது, போதிய நீர் குடிப்பது, சிறுநீர் பாதை நோய் தொற்று மற்றும் அடைப்புக்கு தாமதமில்லாத சிகிச்சையால் கல் உருவாவதை தவிர்க்க முடியும்.

இதன் முக்கிய அறிகுறியாக, வயிற்று வலி. சிறுநீர் பாதையில் வலது, இடது பக்க கீழ் முதுகு பகுதியில் வலி வந்து பரவலாம். வாந்தி, சலவாசல் எரிவு, சிறுநீரில் இரத்தம் கலந்து வெளியேறுதல், சிறுநீரின் வேகம் தடைப்படுதல், காய்ச்சல் என்பன ஏற்படலாம்.

பெண்களை விட ஆண்களுக்கு, சிறுநீரக கல் உருவாகும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகமாகும். சிறுநீரகத்தில் பாதிப்பு உள்ளவர்கள் தக்காளி, நெல்லி, முந்திரி பருப்பு, வெள்ளரி, கறுப்பு திராடசை என்பவற்றைத் தவிர்க்கலாம்.

இப்பாதிப்பை தவிர்க்க அளவுடன் பால் உள்ளெடுக்கலாம். எலுமிச்சை சாறு , இளநீர் நிறைய குடிக்கலாம். முள்ளங்கி, வாழைத தண்டு, சிறுநீர் பெருக்கியாக செயற்படுவதால், பெரும் பயன் உள்ளதாகக் கருத முடியாது. பார்லி, கொள்ளு, பாகற்காய், கரட் சேர்த்துக் கொள்ளலாம். ஒருவரின் சராசரி சிறுநீர் அளவு, ஒன்று முதல் ஒன்றரை லீற்றர் வரை இருக்கலாம். கல் உருவாகும் பிரிவினர், 3 முதல் 4 லீற்றர் வரை நீர் பருக வேண்டும். பொது

**Health Care மருத்துவ உலகம்**

**உங்கள் நலம் உங்கள் கைகளில்**


வாக சிறுநீரகத்தில் உருவாகும் 4 மில்லி மீற்றருக்கு கீழ் உள்ள கற்கள், பெரும்பாலும் தானாகவே வெளியேறி விடுகின்றன. 6 மில்லி மீற்றர் நீளத்தை விட பெரியவை, தானாக வெளியேறுவதில்லை. இதற்கு தாராளமாக நீர் பருகுதல் வேண்டும்.

எனினும் மேற்படி நடைமுறைகளை வைத்தியர் ஒருவரின் நேரடி ஆலோசனையின் கீழ் கடைப்பிடிப்பது பாதுகாப்பானதாகும். இதேவேளை, சிறுநீர் வெளி யேற்றலில் ஏற்படும் சிக்கல் நிலை பற்றியும் நோக்குவது சிறந்ததாகும். இது ஆண்களில் முன்னிற்கும் சுரப்பியின் வளர்ச்சியால் ஏற்படுகிறது.

முன்னிற்கும் சுரப்பி ஆண்களுக்கே உரியது: இனப் பெருக்கத்துடன் தொடர்புடையது. இது, சிறுநீர் பாதையின் அடியில், சிறுநீர்ப் பாதையின் முதற்பகுதியை சூழ்ந்துள்ளது.

வயது முதிர்ந்தவர்களுக்கு மிகவும் வளர்ச்சி அடைந்த நிலையில், சிறுநீர்ப் பாதையை இது அழுத்துகிறது. இதனால், சிறுநீர் பாதை அடைபட்டு, சிறுநீர் கழிக்க முடியாமல் தேங்கும். அந்நிலையில், உடனடியாக அடைப்பை நீக்க வேண்டும். வயதானவர்களுக்கு சிறுநீர் சிக்கல் ஏற்படும் போது, ஆசன வாய்க்குள் விரல் வைத்துப் வைத்துப் பார்க்கும் போது முன் னிற்கும் சுரப்பியின் இருபக்க மடல்கள் துருத்திக் கொண்டிரு ப்பதை உணரலாம்.

இப்பாதிப்பால் அடிக்கடி சிறுநீர் கழித்தல், முயற்சிக்கும்போது உடனடியாக சிறுநீர் வெளிவராதது, சிறுநீர் வெளி வருவதை கட்டுப்படுத்த முடியாதது, சிறுநீர் தொடர்ச்சியாக வெளியேற்ற




முடியாதிருப்பது போன்ற சிக்கல் உருவாகும்.

மேலும் நாட்கள் செல்லச் செல்ல, கிருமித் தாக்கம் ஏற்பட்டு, சிறுநீர் தொற்றின் அறிகுறிகளாக, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், காய்ச்சல், அடிவயிற்றில் வலி தோன்றுவது என பாதிப்பை ஏற்படுத்தும்.

முன்னிற்கும் சுரப்பி எந்தளவு வளர்ந்துள்ளது, மலக்குடலின் சீதச்சவ்வை பாதித்துள்ளதா, புற்றுநோய் வளர்ச்சியா? என அறிவது அவசியம்.

50 வயதானவர்கள், ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதனை செய்ய வேண்டும். அறுவை சிகிச்சை தேவைப்படுவோருக்கு, 'எண்டோஸ்கோபி சிகிச்சை செய்யப்படுகிறது.

முன்னதாக, வழக்கமான இரத்தம், சிறுநீர் பரிசோதனைகளுடன், இரத்தத்தில் யூரியா, கிரியேற்றினின், கழி ஒலி அலை படப்பிடிப்பு தேவைப்படும். மேலும், சிஸ்டோஸ்கோபி, பை உள்நோக்கல் சோதனையும் செய்யப்படும். இதன் மூலம், பாதிப்புக்கான வேறு காரணங்களையும் அறியலாம்.

# இசைப்பிரியாவின் காணொளியை அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்

(கொழும்பு)

இலங்கையை சர்வதேச மட்டத்தில் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்கத்துடனேயே சனல் 4 நிறுவனம் மீண்டும் ஒருமுறை வீடியோக் காட்சிகளை வெளியிட்டுள்ளது.

இதனை இலங்கை அரசாங்கம் கணக்கில் எடுக்கவேயில்லை. சனல் 4 நிறுவனம் மீண்டும் ஒருமுறை தோல்வி காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இசைப்பிரியா உயிருடன் பிடிப டு...திய வீடியோக் காட்சியை சனல் 4 நிறுவனம் வெளியிட்டுள்ளமை தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளை இலங்கை முன்னெடுக்கும பொழுது இவ்வாறு வீடியோக காட்சிகளை வெளியிட்டு இலங்கையை அபகீர்த்திக்கு உட்படுததுவது சனல் 4 நிறுவனத்தின் வழக்கமாகி விட்டது. எனவே அதனை நாம் கவனத்தில் கொள்ளவேயில்லை.

இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் சர்வதேச மட்டத்தில் புலி ஆதரவு புலம்பெயர் மக்களின் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த சவாலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது என்றார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

சனல் 4 நிறுவனம் மீண்டும் ஒருமுறை இலங்கை அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உட்படுத்தும் முயற்சியில் வீடியோக் காட்சியை வெளியிட்டுள்ளது. இதனை எமது அரசாங்கம் கணக்கில் எடுக்கவேயில்லை.

காரணம் சனல் 4 நிறுவனமானது பொய்யான விடயங்களையே இவ்வாறு வெளியிடும் என்பது அனைவருக்கும் தெரிந்துவிட்டது. சர்வதேசத்துக்கும் இந்த விடயம் தெரிந்துவிட்டது.

எனவே சனல் 4 நிறுவனத்தின இந்த தோல்வியடையும் முயற்சி குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ளவில்லை.

இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் கெலம் மெக்கரேக்கு பொது நலவாய மாநாட்டின் செய்தி சேகரிப்புக்கு வருவதற்கு அனுமதி வழங்கவும் நாங்கள் தயாராகியுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை அமர்வுகள் நடைபெறும்போதும் பிரித்தானியாவில் முக்கியமாக ஏதாவது நிகழ்வுகள் இடம்பெற்றாலும் சனல் 4 நிறுவனம் இவ்வாறு வீடியோக் காட்சிகளை வெளியிடுவது வழமையாகிவிட்டது.

தற்போது இலங்கையில் பொது நலவாய அரச தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் இந்த வீடியோக் காட்சியை முன்வைத்துள்ளனர்.

எனினும் அந்த நிறுவனத்தின் இந்த முயற்சியானது தற்போது பெறுமதியற்றதாகிவிட்டது. பொய்யான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும்போது இந்த நிலையே ஏற்படும்.

நான் அந்த வீடியோக்காட்சியை பார்வையிடவுமில்லை. பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. காரணம் சனல் 4 நிறுவனம் தொடர்ந்து பொய்யான விடயங்களையே வெளியிட்டு வருகின்றது.

எனவே அது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டியதில்லை என்றார். (அ-2)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வெற்றிமணி கல்விப் பணி மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை நூலகங்களுக்கான இலவச நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# 250 அழகுக் கலையகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

தரம் குறைந்த மற்றும் காலாவதயான அழகுசாதனப்பொருட்களை பயன்படுத்தி வந்த 250 அழகுக் கலை நிலையங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

நுகர்வோரை பாதுகாக்கும் நோக்கில் இச்சபையினால் நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட அழகுக்கலை நிலையங்க... இந்த திடீர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டனர்.

இச்சுற்றிவளைப்பில் கொழும்பிலுள்ள அழகுக்கலை நிலையங்களுக் கெதிராகவே அதிக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பொலனறுவை, கம்பஹா, குருணாகல், மாத்தறை, புததளம், நுவரெலியா, யாழ்ப்பாணம, கண்டி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல அழகுக் கலை நிலையங்களும் முற்றுகையிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

அழகுக்கலை பற்றிய ஓரளவு அறிவைப் பயன்படுத்தி பலர் தரம் குறைந்த மற்றும் காலாவதியான அழகுசாதனப் பொருட்களை கையாண்டு பணம் சம்பாதிப்பதாக கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு முறைப்பாடு கிடைத்தது.

இதனைத்தொடர்ந்தே அமைச்சின பணிப்புரையின் பேரில் இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டதாக அதிகார சபை தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொடர்ந்தும் இந்த சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார். (அ-2)

## அதிவேக நெடுஞ்சாலையில் முதலாவது விபத்து

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் 1.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பதிவான முதலாவது விபத்துச் சம்பவம் இதுவாகும்.

...ந்த விபத்தின்போது காருக்கும் வீதியின் இருமருங்குகளிலும் உள்ள பாதுகாப்பு வேலிகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.(அ-2)

## வீடழிப்பு நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடவில்லை

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளோ, தமிழர்களின் வீடுகளை அழிக்கும் நடவடிக்கைகளோ இடம் பெறவில்லை என்று இராணுவம் தெரிவித்துள்ளது. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்கிலுள்ள பொது மக்களின் குடியிருப்புகளை அழிக்கும் பணிகளை நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்ட பின்னரும், அங்கு குடியிருப்புகள் அழிக்கப்பட்டுவருதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு குற்றம் சுமத்தி இருந்தது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டபோதே இராணுவப் பேச்சாளர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இராணுவத்தினர் சிங்கள குடியேற்றத்தை மேற்கொள்வதற்கான வீடமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாகவும், தமிழ் மக்களின குடியிருப்புகளை அழித்து வருவதாகவும் ஊடகங்களில் தெரிவக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இராணுவத்தினர் எவரும் அவ்வாறான செயற்பாடுகளில எவற்றிலும் ஈடுபடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இராணுவ முகாமின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலேயே நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தமிழகத்தின் தீர்மானத்துக்கு பிரி.அமைச்சர் நன்றி தெரிவிப்பு

இலங்கை தொடர்பில் தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியமைக்காக முன்னாள் பிரித்தானிய அமைச்சர் ஜோன் மாரி ரெயன், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார். உலகத் தமிழர் பேரவையின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அவர், ஜெயலலிதாவுக்கு அறிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து இலங்கை அமர்வுகளில் பங்கேற்கக் கூடாது என கோரி தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என அதில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேரவையின் தலைவர் வணக்கத்திற்குரிய பிதா இமானுவேல் மற்றும் ரெயன் ஆகியோர் இணைந்து கையொப்பமிட்டு ஜெயலலிதாவுக்கு இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரெயன், உலகத் தமிழர் பேரவையின் கொள்கை ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## விசாவுக்கு பிணைப்பணம் அறவிடும் திட்டத்தை கைவிட்டது பிரிட்டன்

(கொழும்பு)

விசா விண்ணப்பதாரிகளிடம் பிணைப் பணம் அறவீடு செய்யும் திட்டத்தை பிரித்தானியா கைவிட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளைச் சேர்ந்த விசா விண்ணப்பதாரிகளிடம் பிணைப்பணமாக 3 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட்களை அறவீடு செய்ய பிரித்தானியா திட்டமிட்டிருந்தது.


எனினும், இந்த யோசனையைக் கைவிடுவதற்கு தற்போது அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னதாக அதிக ஆபத்தான விசா விண்ணப்பதாரிகள் என்ற வகையீட்டின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் இலங்கை, இந்தயா, பாகிஸ்தான், பங்களாதேஷ போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளிடம் பிணைப்பணம் அறவீடு செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் தமது விசா காலம் முடிவடைந்து தங்கியிருந்தால் அந்தப் பிணைப்பணம் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பிணைப்பணத் தொகை அறவீடு செய்வது வீசா விண்ணப்பதாரிகளின உரிமைகளை மீறும் வகையில் அமையக் கூடுமென விமர்சனங்கள் எழத் தொடங்கியதைத் தொடர்ந்து இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. (அ-2)

# போர்க் குற்றங்களினால் விரட்டப்படும் அதிகாரிகள்



விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதிக்கட்டப் போரில் பங்காற்றிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீண்டும் ஒரு சர்வதேச கருத்தரங்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

போர் முடிவுக்கு வந்தபின்னர் மேஜர் ஜெயகத் டயஸூம் அவருடன் பங்கெடுத்த முக்கிய இராணுவ அதிகாரிகளும் இத்தகைய நிலைக்கு உள்ளாவது இதுதான் முதல் தடவை யல்ல.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றச் சாட்டுகள் காரணமாக நான்கு ஆண்டுகளில் இத்தகைய பல சம்பவங்களை இலங்கை இராணுவம் எதிர்கொண்டுள்ளது.

இப்போது மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூக்கு அனுமதி மறுத்திருப்பது, எந்தவொரு தனிப்பட்ட நாடுமல்ல. சர்வதேச செஞ்சிலு வைக் குழுதான் அனுமதியை மறுத்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆபத்தான நிலைமைகளில் சுகா தாரக் கவனிப்பு என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கை அடுத்த மாதம் நடத்தவுள்ளது.

இந்தக் கருத்தரங்கிற்கு இலங்கை இராணுவத்தின் பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறு சர்வதேச செஞ்சிலுவைக் குழு கோரியிருந்தது. அதற்கமைய இலங்கை இராணுவத் தலைமையகத்தினால் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், சர்வதேச செஞ் சிலுவைக் குழு அதை நிராகரித்துவிட்டது.

இந்த நிராகரிப்புக்கான காரணத்தை சர்வதேச செஞ்சிலுவைக் குழு வெளியிடவில்லை. எனினும் பொறுப்புக் கூறல் விவகாரமே, அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தமைக்கான காரணமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இதே காரணத்திற்காக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூம் வேறு சில இராணுவ அதிகாரிக்ளும் சர்வதேச அளவில் ஏற்கனவே இது போன்ற சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர்.

அதிலும் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூம் மேஜர் சவீந்திர சில்வாவும் தான், அதிகளவான நெருக்கடிக்கு உள்ளானவர்கள்.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஐ.நா.வுக்கான பரிதித் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதால் ஓரளவுக்குத் தப்பித்துக் கொண்டுள்ளார். ஆனால், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூக்குத் தான் எங்கு சென்றாலும் பிரச்சினையாக உள்ளது. மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின் தொடக்கத்தில் இருந்து முடிவுவரை கட்டளை வழங்கும் முக்கிய இடத்தில் இருந்தவர்.

2007 இல் மடுப்பகுதியில் இறுதிக்கட்டப் போர் தொடங்கப்பட்ட சில வாரங்களிலேயே, அதில் பங்கேற்ற 57 வது டிவிஷன் விடுதலைப் புலிகளின் ஒரு எதிர்த் தாக்குதலால் நிலைகுலைந்து போனது.

அதன் பின்னர் 57 வது டிவிஷன் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மானவடுவை நீக்கிவிட்டு, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸை அந்தப் பதவிக்கு நியமித்திருந்தார், அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. அன்று முதல் முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வரும் வரையில் 57 வது டிவிஷனின் தளபதியாக பதவி வகித்துவந்தார் இவர்.

இந்தப் போரின்போது முக்கிய தாக்குதல்களுக்கு இவரே பொறுப்பு என்று. குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் போரில் முக்கிய பங்கெடுத்த இவரையும் மேஜர் சவீந்திர சில்வாவையும் கௌரவப்படுத்தும் வகையில் இராஜதந்திரப் பதவிகளை வழங்கியது அரசாங்கம்.

2009 செப்ரெம்பரில் ஜேர்மனிக்கான துணைத்தூதராக நியமிக்கப்பட்ட இவரிடம் சுவிஸ் உள்ளிட்ட நாடுகளையும் கவனிக்கும் பொறுப்பு இருந்தது. இந்த நிலையில் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூக்கு எதிராக சுவிஸில் போர்க்குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதற்கிடையில் அவர் கொழும்பு திரும்பிவிட்டார். ஆனாலும் மேஜர் ஜெகத் டயஸ் தமது நாட்டு எல்லைக்குள் பிரவேசித்தால் அவருக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் நடத்தபப்டும் என்று எச்சரித்திருந்தார், சுவிற்சலாந்தின் சட்டமா அதிபர். இது தான் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் சர்வதேச அளவில் சந்தித்த முதல் நெருக்கடி.

இதற்குப்பின்னர் கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் குன்னூரில் உள்ள வெலிங்டன் பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில், நடந்த கருத்தரங்கு ஒன்றிற்குச் சென்றிருந்தார் இவர். அவ்வேளை அவருக்கெதிராகப் போராட்டங்கள் தீவிரமடைந்ததன் விளைவாக வெலிங்டனில் இருந்து அவசரமாக வேறுஇடம் கொண் செல்லப்பட்டார்.

இதையடுத்து கடந்த செப்ரெம்பர் மாதம் நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரில் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தினால் இராணுவ முகாமைக் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கருத்தரங்கிற்கு மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், சுதந்த ரணசிங்க, பொனிஸ்பஸ் பெரோரா என மூன்று பேரை அனுப்ப இராணுவத் தலைமையகம் நடவடிக்கை எடுத்தது.

ஆனால், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூம், சுதந்த ரணசிங்கவும் பொறுப்புக் கூறல் விவகாரங்களில் சிக்கியுள்ளவர்கள் என்று காரணம் காட்டி அக்கருத்தரங்கில் இவர்கள் பங்கேற்க மறுத்துவிட்டது அமெரிக்கா.

இதனால், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா மட்டும் அதில் பங்கேற்றார்.

இதில், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க இரண்டு தடவைகள் அமெரிக்காவினால் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

காரணம் 53வது டிவிஷனின் தளபதியாக இருந்தவர் என்பதினால் தான்.

மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க 53வது டிவிஷனின் தளபதியாகப் பதவி வகித்தது, போர்முடிவுக்கு வந்த பின்னர் தான்.

ஆனாலும், அந்தப் படைப் பிரிவுடன் தொடர்புடைய அதிகாரிகளை அமெரிக்கா போருக்கு முந்திய, பிந்திய என் வேறுபடுத்திப் பார்க்கவில்லை.

போரின்போது 53 வது டிவிசன் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அமெரிக்கா வலுவாக நம்புகிறது.

53 வது டிவிஷனால் கொல்லப்பட்டதாக 2009இல் பாதுாப்பு அமைச்சு அறிவித்த விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி வாசிபாளரான இசைப்பிரியா, உயிரோடு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் வீடியோ ஆதாரத்தை கடந்த வாரம் சனல்-4 வெளியிட்டுள்ளது. இதுபோன்ற ஆதாரங்கள் தான் 53 வது டிவிஷன் உள்ளிட்ட படைப்பிரிகளுக்கு தலைமை தாங்கியவர்களை அமெரிக்கா நிராகரிக்க காரணமாகும்.

இது இலங்கை அரசாங்கத்துக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தான் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் பங்கெடுத்த இராணவ அதிகாரிகள் பொறுப்புக் கூறல் விவகாரங்களினால் சர்வதேச அளவில் ஓரம் கட்டப்படும் நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை தென்னாபிரிக்கா, பிரதித் தூதுவராக ஏற்க மறுத்துவிட்டது. ஏற்கனவே அவரை மேலதிக இராணுவப் பயிற்சிக்காக அனுமதிக்க மறுத்துவிட்டதுடன், பிரபலமான அமெரிக்க போர்க் கல்லூரிக்குள் நுழையவும் தடை விதித்தது. ஆனாலும் ஐ.நா. பிரதித் தூதுவராக இருப்பதால் ஓரளவுக்கு இவர் 'தப்பிக் கொண்டுள்ளார்.

மேலும் சிலருக்கு அமெரிக்கா பயிற்சி அளிக்க மறுத்துவிட்டது.

மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயும், மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வாவும் பிரிட்டனுக்குள் நுழைந்தால் போர்க்குற்ற விசாரணைகளை சந்திக்க நேரிடும். அங்கு இவர்களுக்கு எதிராக ஏற்கனவே வழக்குகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறாக போரில் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த இராணுவ அதிகாரிகளை மனித உரிமை மீறல்கள் ஓட ஓட விரட்டுகின்றன.

வரும் காலங்களில் மேலும் பல இராணுவ அதிகாரிகள் இத்தகைய நிலையை எதிர்கொள்ளலாம்.

இந்த நிலையில் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸூக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதி மறுத்த விவகாரத்தை பாதுகாப்பு அமைச்சும் அரசாங்கமும் கடுமையாகவே எடுத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேவசத்திற் இடையிலான உறவுகளில் தேக்க நிலை காணப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை, இலங்கையை விட்டு வெளியேற்றும முடிவை அரசாங்கம் எடுத்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அதை அரசாங்கம் உடனடியாக- கொமன் வெல்த் மாநாடு முடியும் வரை செய்வதற்கு வாய்ப்புகள் இல்லையென்று கருதலாம்.

-சுபத்ரா-

# சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு கசினோ சூதாட்டம் அவசியம்

## உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

**இலங்கையில் சுற்றுலாத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்த கசினோ சூதாட்டம் அவசியமானது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். கண்டி பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.**

கசினோ சூதாட்டத்தை விட பல மடங்கு தீங்கான குதிரை பந்தய சூதாட்டம் உட்பட பல சூதாட்ட நிலையங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றை எவரும் எதிர்ப்பதில்லை.

இலங்கையில் குறைந்த வருமானத்தை பெறும் சாதாரண மக்கள் குதிரை பந்தய சூதாட்டத்திற்காக பணத்தை செலவிடுகின்றனர். அத்துடன் அதில் பணத்தை இழந்து பெரும் விளைவுகளையும் சந்திக்கின்றனர்.

இலங்கையில் கசினோவுக்கான தனியான இடம் ஒதுக்கப்பட்டு அங்கு வெளிநாட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

நாட்டில் ஏனைய இடங்களில் இருக்கும் கசினோ நிலையங்கள் ஒரு இடத்திற்கு கொண்டு செல்லப்படும்.

குதிரை பந்தயம் ஏற்படுத்தும் தீங்கை கசினோ ஏற்படுத்தாது. கொழும்பில் கசினோ நிலையங்கள் ஏற்படுத்தப்படுவது நாட்டின் சுற்றுலாத்துறைக்கு மட்டுமல்லாது நாட்டின் பொருளாதாரத்திற்கும் உதவும்.

இலங்கையின் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இது போன்ற நேரத்தில் அந்த வளர்ச்சியை முன்னோக்கி தள்ளுவதற்கு அதனை ஆதரிக்க வேண்டும் என்றார். (அ)

# போதை கொள்கலனை கடத்தி வந்தது யார்?

## ஹெல உறுமய கேள்வி

போதைப் பொருள் கொள்கலன் பற்றிய தகவல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அண்மையில் இரண்டு கொள்கலன்களிலிருந்து 260 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இந்த போதைப் பொருள் மீட்பு தொடர்பிலான உண்மைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமெனஅக் கட்சி கோரியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பிரஜை ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அதன் பின்னர் நடைபெற்ற விசாரணைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

போதைப் பொருட்களை உண்மையில் யார் கடத்தியிருந்தார்கள் என்பது பற்றிய தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

போதைப் பொருள் கடத்தலுடன் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், தற்போது இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகவும் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நாமல் ஜனாதிபதியாவதை எவருமே தடுக்க முடியாது

## ஈரான் தூதுவர் புகழாரம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதியாவதை எவராலும் தடுக்க முடியாது என ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் புய்சால் ராசீன் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ராஜபக்சாக்கள் இந்த நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைக்கு பிரதியுபகாரமாக மக்கள் நாமலை ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள்.

இன்று கொழும்பை விடவும் ஆச்சரியமிக்க அளவிற்கு அம்பாந்தோட்டை அபிவிருத்தி அடைந்துள்ளது.

உலகின் பலம்பொருந்திய நாடுகள் பயங்கரவாதப் பிடியில் சிக்கியிருக்கையில் , ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவின் முயற்சியால் நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது.

இதன் காரணமாக ஆசியாவின் பல நாடுகளில் ஜனாதிபதியை ஆசிய சிங்கம் என அழைக்கின்றனர்.

எனவே, ராஜபக்சாக்களை பாதுகாப்பதற்கு இன,மத, குல பேதங்களை களைந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜே.வி.பி.முதலமைச்சர் வேட்பாளர் லால்காந்த

(கொழும்பு)


அடுத்த வருடம் நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சியின் தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் கே.டி.லால்காந்த முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவார் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அரசாங்கம் ஏனைய மாகாண சபைகளில் வெற்றி பெற்ற போதிலும் மேல் மாகாண சபைத் தேர்தலில் மட்டும் வெற்றி பெறப் போவதில்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் லால்காந்த கொழும்பு மாவட்டத்தில் தலைமை வேட்பாளராக போட்டியிடுவார். ஜே.வி.பி. ஏனைய அரசியல் கட்சிகள் போன்ற கட்சியல்ல. கடந்த தேர்தல்களில் கட்சி பின்னடைவைச் சந்தித்த போதிலும் அது வலுவான நிலையிலேயே உள்ளது.

ஜே.வி.பி. ஒரு நிலைப்பாட்டில் இருந்து சரியான அரசியலை மேற்கொள்ளும் கட்சி. இதனால் ஜே.வி.பி.தொடர்பில் அதன் ஆதரவாளர்கள் பெருமை கொள்ள வேண்டும்.

ஜே.வி.பியை ஏனைய அரசியல் கட்சிகளுடன் ஒப்பிட முடியாது. தேர்தல்களில் என்ன நடப்பினும் நாம் எமது அரசியலை நிறுத்தமாட்டோம் என்றார். (அ)



எஸ்.பத்மநாதனால் மொழி பெயர்க்கப்பட்ட Tamil Short Stories எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் முதற் பிரதியை வழங்க இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவர் என்.சிவரட்ணம் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

## கடலில் மூழ்கி பிரிட்டன் பிரஜை உயிரிழப்பு

காலி, ஹிக்கடுவை பிரதேசத்தில் பிரித்தானிய பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மூன்று பேருடன் இணைந்து நேற்று முன்தினம் மாலை கடலில் நீராடச் சென்ற நிலையிலேயே அவர் கடலில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாரிய அலை ஒன்றில் சிக்கி அந்த அலையினால் அவர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரதேசவாசிகளின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளது.

56 வயதான பிரித்தானிய பிரஜையே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கே. ஜோன் என்று அடையாளம் காணப்பட்டுள்ள குறித்த பிரித்தானிய பிரஜையின் சடலம் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஹிக்கடுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# கசினோ சூதாட்ட மையம் அமைப்பதில் தவறில்லை

(கொழும்பு)

இலங்கையில் கசினோ சூதாட்ட நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதை தான் எதிர்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

கௌதம புத்தர் காலத்திலும் சூதாட்டம் நடைபெற்றுள்ளது. ஆனால், இலங்கையர்கள் பங்கேற்க முடியாத வகையில் சூதாட்ட மையங்களை அமைப்பதில் தவறில்லை.

உலக மாற்றங்களுக்கு அமைவாக இலங்கையர்களும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். எனவே, இலங்கையில் கசினோ சூதாட்ட மையங்களை அமைப்பதில் தவறில்லை.

உலகுடன் செல்லும் பயணத்தின் போது இலங்கையர்கள் தனிமைப்பட்டு நிற்க முடியாது. சூதாட்டத்தில் இலங்கையர்கள் தூண்டப்படுவதைத் தடுக்கவே பௌத்த பிக்குகள் குரல்கொடுக்க வேண்டும்.

சுற்றுலாத்துறையின் மூலம் இலாபமீட்ட வேண்டுமாயின் கசினோ போன்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் தவறில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கசினோவை கண்காணிக்க அதிகாரசபை வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் கசினோ சூதாட்டத்தை கண்காணிக்க அரசாங்கம் ஒழுங்குபடுத்தும் அமைப்பு ஒன்றை நியமிக்க வேண்டும் என இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கசினோ மற்றும் அதன் செயறபாடுகளை கண்காணிக்க தேசிய கசினோ ஒழுங்குபடுத்தும் அதிகார சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும் என பொருளியலாளரும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையல்,

கசினோ சூதாட்டத்தின் தற்போதைய செயற்பாடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள், அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ள மற்றும் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் முக்கியமான கண்காணிப்புகளை இதன் ஊடாக மேற்கொள்ள முடியும். ஏல விற்பனை பாணியில் கசினோ அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் அரசாங்கம் வருவாய் ஈட்ட முடியும்.

கசினோ சூதாட்டத்திற்கு சட்ட அந்தஸ்தை வழங்க தீர்மானிக்கும் முன்னர் அரசாங்கம் இந்த புதிய கட்டமைப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். கசினோ சூதாடடம் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நாட்டில் ஒரு கசினோ சூதாட்ட கூட்டணியை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## பௌத்த பிக்குவுக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

மதுபோதையில் குழப்பம் விளைவித்த பௌத்த பிக்கு ஒருவர் மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நீதிமன்றம் அவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

சந்தேக நபரான பிக்கு, குருபேவில பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் மதுபோதையில் குழப்பம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு இறத்தோட்டை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் பிக்குவுக்கு மேற்படி அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வெற்றிக்கிண்ணம் இணுவில் யூத் அணி வசம்



(மானிப்பாய்)

நந்தாவில் அம்மன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அமரர் குருநாத் ஞாபகார்த்த துடுப்பாட்டப் போட்டியில் இணுவில் யூத் அணி வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து கொண்டது.

தீபாவளியை முன்னிட்டு அழைக்கப்பட்ட 6 அணிகள் கலந்து கொண்ட அமரர் குருநாத் ஞாபகார்த்த 8 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்கு பற்றும் துடுப்பாட்டப் போட்டிகள் நந்தாவில் அம்மன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் நந்தாவில் அம்மன் விளையாட்டுக்கழகத்தை வென்று இணுவில் யூத் அணியும் சிந்மய பாரதி விளையாட்டுக்கழகத்தை வென்று ஆர்.வீ.விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

இறுதிப் போட்டியின் நாணயற் சுழற்சியில் வென்ற இணுவில் யூத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இணுவில் யூத் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்ற நிறைவில் 5 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் இணுவில் யூத் அணி சார்பாக கோகுலன் ஆட்டமிழக்காது 7 ஆறுகள் அடங்கலாக 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் ஆர்.வீ.விளையாட்டுக்கழகம் சார்பாக தனலக்ஷன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 99 என்னும் வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆர்.வீ.விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்ற நிறைவில் 8 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்துவீச்சில் இணுவில் யூத் அணி சார்பில் மதன், கோகுலன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். இதன்படி இணுவில் யூத் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. (5-23)

## இளைஞன் மீது தாக்குதல்

மதுபோதையில் நின்ற இளைஞர்கள் வீதியால் சென்ற இளைஞனைத் தாக்கியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் சித்தன்கேணியில் இடம் பெற்றுள்ளது. இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் நீண்ட காலத்தின் பின்னர் தனது சொந்த ஊருக்கு வந்த குறித்த இளைஞன் வீதியால் சென்ற வேளை அவ்விடத்தில் மதுபோதையில் நின்ற இளைஞர்கள் அவ் இளைஞர்களைத் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்த சதாசிவம் கிருபாகரன் (வயது 29) என்ற இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்ட இளைஞர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-9-17)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் வேம்படி சித்திவிநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக தின 3 ஆவது மணவாளக் கோல விழா எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (அ-5)

## அலுமினியம் பொருத்துதல் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் நடத்தப்பட்டு வரும் அலுமினியம் பொருத்துதல் தொழிற்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு விரைவாக மேற்கொள்ளலாம்.

மேலும் மேற்படி கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு NVQ தரச்சான்றிதழ் வழங்கப்படுவதுடன் ஏனைய தொழிற்கைநெறிகள் தொடர்பில் தகுந்த ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும் என பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (அ)

## சிறைச்சாலை திணைக்களத்திற்கு 194 அதிகாரிகள் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றுவதற்கென மேலும் ஒரு தொகுதியினர் பணியில் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பணிகளுக்கு 194 அதிகாரிகள் இணைத்து கொள்ளப்படவுள்ளதுடன் இவர்களில் 30 பேர் புலனாய்வுப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகள் ஒவ்வொன்றிலும் ஐந்து பேர் வீதம் பணிகளில் அமர்த்தப்படவுள்ளனர்.

சிறைச்சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்காக சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவை வலுப்படுத்துவது கட்டாயமானது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)



சுன்னாகம் றோட்டறிக் கழகம் மற்றும் இளைஞர் கழகம் இணைந்து தீபாவளியை முன்னிட்டு ஏற்பாடு செய்த மகிழ்வித்தல் மற்றும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு கைதடியில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்காவில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுன்னாகம் றோட்டறிக் கழகத் தலைவர், கழக அங்கத்தவர்கள், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர், சம்மேளனத் தலைவர், அமைப்பாளர், அங்கத்தவர் ஆகியோருடன் விழிப்புலனற்றோர் சங்கத்தினர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# இலங்கையின் உள்விவகாரங்களில் தமிழகக் கட்சிகள் தலையிடக்கூடாது

## அஸ்வர் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் காவேரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து அரசியல் சுயலாபத்திற்காக இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினருமான ஏ.எச். எம். அஸ்வர் தெரிவித்தார்.

தற்போது தமிழ் நாட்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் புதுடில்லி தனது உண்மையான நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழக அரசு மாத்திரமின்றி சில அரசியல் கட்சிகளும் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றன.

தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பிரச்சினையாக காவேரி நதிப் பிரச்சினை தமிழ் நாட்டுக்கும் ஆந்திர மாநிலத்திற்குமிடையில் இருந்து வருகின்ற நிலையில், தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் எதிர்வரும் காலங்களில் முகங்கொடுக்கவுள்ள தேர்தல்களுக்காக வேண்டி இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகின்றன.

மேலும், நாட்டின் 30 வருடகால யுத்தம் நிறைவுபெற்றுள்ள இவ்வேளை, வடக்கில் மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் தங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான கருத்தை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளையும் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்கள் குறித்து தமிழ் நாடு, பிரித்தானியா போன்றவை கோஷமிடுகின்றன. இலங்கைத் தமிழ் மக்களின் உண்மை நிலவரத்தை இங்கு வந்து பார்த்த பின்பே தெரிந்து கொள்ளலாம்.

எனவே, நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டுவது தொடர்பாக ஊடகங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டிக்கு இரு அணிகள் தெரிவு

(மானிப்பாய்)

அரச அதிபர் வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டிக்கு சங்கானை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலக அணிகள் தெரிவாகியுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினரால் அரச அதிபர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகள் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்டன.

மேற்படி விளையாட்டுப் போட்டியின் துடுப்பாட்டப் போட்டிகள் கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிலையில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணி 3 விக்கெட்டுக்களால் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை வென்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி 20 ஓட்டங்களால் யாழ்.மாவட்ட செயலக அணியை வென்றது. மேற்படி இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகன் தெரிவித்துள்ளார். (அ-9-23)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 07.10.2013 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த லாலா சோப் உரிமையாளரின் அன்புத் துணைவியார்

**அமரர் வன்னியசிங்கம் மனோன்மணி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 06.11.2013 புதன்கிழமை அன்று காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் எனது அன்புக்குரியவர்கள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

பொ.வன்னியசிங்கம் (லாலா)
லாலா சோப், பிரதான வீதி,
அச்சுவேலி.

(சி-5375)

# மக்களின் துன்பத்திற்கு அரசாங்கமே காரணம்

**அனுரகுமார எம்.பி. தெரிவிப்பு**



(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தில் கவர்ச்சிகரமான பொருளாதாரக் கொள்ளை என்ற மாயா ஜாலத்தை புறந்தள்ள, நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான திட்டம் ஒன்றையே முன்வைக்க வேண்டும். இதிலிருந்து அரசு தவறுமேயானால் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து வீதியில் இறங்குவதைத் தடுக்க முடியாது என்று ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

கண்மூடித்தனமான முறையில் கடன்களை பெற்றுவருகின்ற அரசாங்கம் நாட்டு மக்களை கடன்காரர்களாக மாற்றியிருப்பதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

தற்போது பேருந்து கட்டணம் மற்றும் பால்மாவின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கம் கடன்பெற்றே அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அத்துடன், அரசின் செலவீனங்கள் அனைத்தும் பெற்ற கடனை மீள செலுத்துவதிலேயே உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பெற்ற கடனிலிருந்தே ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் மின் கட்டணம் செலுத்தப்படுகிறது. நாட்டின் அபிவிருத்தியை மையப்படுத்தி அரசாங்கம் கடன் பெறவில்லை. மாறாக தமது அமைச்சர்களின் சுகபோகங்களுக்காக வே கடன் பெறுகிறது.

அது மாத்திரமின்றி தற்போது ரூபாவினுடைய பெறுமதியை குறைவடைய செய்து டொலரின் பெறுமதியை அதிகரிக்க செய்யும் வகையில் அரசின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

அரசாங்கமானது தான் பெற்ற கடனை மீள செலுத்தும் பணத்திலிருந்து கட்டுநாயக்க அதிவேக நெஞ்சாலை போன்ற 10 அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்க முடிவதுடன், மத்தள விமான நிலையம் போன்று பல விமான நிலையங்களையும் நிர்மாணிக்க முடியும்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நிதியாண்டறிக்கையினூடாக ராஜபக்ஷ குடும்பத்திற்கே அதிக நிதித்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வறிக்கையின்படி 50 வீதமான அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதுமட்டுமின்றி அரச ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட ஆண்டிற்கான வரிச்சலுகைகள் வழங்கப்படவில்லை.

ஆகவே, அரசாங்கம் அனைத்து தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு அமைய இம்முறை வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் தமது கட்சி உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் வீதிக்கிறங்கி போராட வேண்டியேற்படும் எனக் கூறினார். (அ-2)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் மாநகரசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி பதவியணிகளில் உள்ள வெற்றிடங்களின் விபரங்களிற்கமைய, கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ ம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | பதவி இலக்கம் |
|---|---|
| சுகாதார தொழிலாளி வகுப்பு III | 01 |
| வேலைத்தொழிலாளி வகுப்பு III | 02 |
| நகரமண்டப பாதுகாவலர் வகுப்பு III | 03 |
| நூலக உதவியாளர் வகுப்பு III | 04 |
| மேசன் வகுப்பு III | 05 |
| திருத்துநர் வகுப்பு III | 06 |
| இயந்திர இயக்குநர் வகுப்பு III | 07 |
| தச்சுத்தொழிலாளி வகுப்பு III | 08 |
| சாரதி வகுப்பு III | 09 |

## சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும், ஒய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

## அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும் அத்துடன் யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்..
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 19.11.2013 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களிற்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தொழில்நுட்பம் சார் சேவைகளிற்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## தெரிவு செய்யப்படும் முறை

சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை தொழில் அனுபவம். வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளிற்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

## விண்ணப்பிக்கும் முறை

1. யாழ் மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் ரூபா 250 ஐச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து உரிய விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு **"ஆணையாளர், யாழ் மாநகரசபை, பருத்தித்துறை வீதி, நல்லூர்"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென தெரியவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தி வைக்கப்படும்.

**விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத்திகதி 19.11.2013 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்க கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**

பதவி இலக்கம் : 01 , 02, 03 , 04 ,

**கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படா்த அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம் :**

01.01.2013 ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் Rs. 11730 – 18 x120 – 13890 (PL- 1- 2006 A) ஆகும்

பதவி இலக்கம் : 05 , 06, 07 , 08

**கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் கல்வி நிறுவனத்தில் ஆறு மாதங்களிற்கு குறையாத குறிப்பிட்ட துறைரீதியான தொழில் சார் கற்கைநெறி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம் :**

01.01.2013 ம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் Rs. 12210 – 18x130 - 14550 (PL 2 2006 A) ஆகும்

பதவி இலக்கம் : 09

கல்வித் தகைமை :

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை (Class Of Vehicle C C1) விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 ½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
6. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பளம் :

01.01.2013 ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் Rs. 12470 – 18 x130 – 14810 (PL 3 2006 A) ஆகும்

*2013.10.31*
*மாநகரசபை அலுவலகம்,*
*பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

(சி-5376)

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# இசைப்பிரியாவின் படுகொலைக்கு பின்னரும் மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டுமா?

## தி.மு.க. தலைவர் கருணாநிதி உருக்கம்



**(சென்னை) இசைப்பிரியாவுக்கு நடந்த கொடூரத்திற்குப் பின்னரும் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியப் பிரதிநிதிகள் செல்ல வேண்டுமா? என்று தி.மு.க.தலைவர் முத்துவேல் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு,

இசைப்பிரியாவை, பாடசாலை சென்று வரும் குழந்தை என்று கூடச் சொல்லலாம். விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவில் ஒருத்தியாக தன்னை இணைத்துக் கொண்டது தான் அவர் செய்த பாவம்.

அந்தக் குழந்தையை இலங்கை இராணுவத்தினர் கொடூரமாகக் கொலை செய்த காட்சியை சனல் 4 தற்போது வெளியிட்டுள்ளது.

பொதுநலவாயநாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவிருக்கும் நேரத்தில், இசைப்பிரியா தொடர்பான காட்சிகளை, சனல் 4 நிறுவனம் உலகம் முழுவதிலும் வெளிக் கொணர்ந்து நம்மையெல்லாம் தேம்பிப் புலம்ப வைத்துள்ளது.

இந்தக் கொடுமையான காட்சியை நம்முடைய நாட்டுப் பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சரும், மற்றும் இம் மாநாடடில் இந்தியா கலந்து கொள்ள வேண்டுமென்று இன்னமும் குரல்கொடுத்து கொண்டிருப்பவர்களும் கண்டபின்னரும், அந்த மாநாட்டிலே கலந்து கொள்ள வேண்டுமென்று எண்ணு கிறார்களா? அதில் இந்தியா கலந்து கொள்ளுமாயின், நாமெல்லாம் தமிழர்கள் தானா என்று சரித்திரம் சாபமிடாதா?

ஈழத்தில் நடந்த இனத் துடைப்பு நடவடிக்கைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும், வரலாறு கண்டிராத போர்க் குற்றங்களுக்கும் சுதந்திரமானதும் நம்பகமானதுமான சர்வதேச விசாரணை வேண்டும. குற்றவாளிகள தண்டிக்கப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் விரும்பும் நியாயமான அரசியல தீர்வை அவர்களே முடிவு செய்து கொள்ளும் வகையில், ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

நெஞ்சை உலுக்கிடும் இந்த நிகழ்வுக்கு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திடும் வகையிலும், இலங்கையிலே நடைபெறவுள்ள இம்மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று இங்குள்ள தமிழர்களும், உலகெங்குமுள்ள தமிழர்களும எதிர்பார்க்கிறார்கள்!

மேலும் பிரபாகரனின் பச்சிளம் மகன் பாலச்சந்திரனுக்கு, தன்னை இராணுவத்தினர் கொலை செய்யப் போகின்றனர் என்றுபுரிந்துகொள்ள முடியாத பருவம்.

அவன் மார்பில் 5 குண்டுகளைப் பாய்ச்சி கொலை செய்த கொடுமையையும் நாம் கண்டு கதறினோம்.

இலங்கை அரசு வெறியோடு, ஈழத் தமிழரகளுக்குச் செய்திருக்கும் கொடுமைகளை இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாகிய தமிழ் மக்களைப் பொட்டுப் பூச்சிகளாக எண்ணி இலங்கை அரசு சீரழிப்பதை எண்ணி, தமிழகத்தில் உள்ளோர் இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம்.

ஈழத்தில் நடந்த இன அழிப்பு, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை வேண்டும. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டு[illegible]

இதற்காகச் சர்வதேசத்தின் கருத்தை ஒன்று திரட்டும் முயற்சியைத் தொய்வின்றி முன்னெடுத்துச் செல்வோம்.

இந்திய அரசு, என்ன செய்துவிடப் போகிறது.இசைப்பிரியாவின் மறைவை எண்ணி இந்தியா கண்ணீராவது சிந்துமா? என்று கருணாநிதி உருக்கமாக கேள்வியெழுப்பியுள்ளார். (2)

## வங்கக் கடலில் உருவான தாழ்வுநிலை நகர்ந்துள்ளது

வங்க கடலில் கன்னியாகுமரி அருகே நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் இலங்கை அருகே வங்க கடலில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதனால் பலத்த மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நிருபர்களிடம் கூறியதாவது,


வங்க கடலில் நேற்றுமுன்தினம் கன்னியாகுமரி அருகே நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து மாலைதீவு,இலட்சத்தீவு கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

இதற்கிடையே மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கையையொட்டி தென்மேற்கு வங்க கடலில் உருவாகி உள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாடு புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் பலத்த மழை பெய்யும். (2)

# பொ.ந.மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## ராஜா வலியுறுத்து



இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ள சூழலில் அங்கு நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதுடன், அந்நாடு குறித்த கொள்கையை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் டி. ராஜா வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு,

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளராக கடமையாற்றிய இசைப்பிரியா, இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக சனல் 4" தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

இலங்கை ராணுவம் கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களில் இதுவும் ஒன்று.

இந்தச் சூழலில், இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிப்பதுதான் முறையாக இருக்கும்.


தவிர்க்கவே முடியாதளவுக்கு குறித்த மாநாடு ஒன்றும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல.

ஏற்கனவே, கனடா இந்த மாநாட்டைப் புறக்கணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த விவகாரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி குழம்பிப்போய் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது. மத்திய கப்பல்துறை அமைச்சர் வாசன், இந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்கிறார்.

வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் பங்கேற்க வேண்டும் என்கிறார். மிகவும் மூத்த அமைச்சரான நிதியமைச்சர் ப. சிதம்பரமோ இந்த விவகாரத்தில் மௌனம் காத்து வருகிறார்.

பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக சட்டப் பேரவையில் ஒருமனதாகநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு அலட்சியப் படுத்திவிட முடியாது என்றார். (2)

# மாநாட்டை புறக்கணிக்க கோரி சமத்துவ மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம்



இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இந்தியாவின் பிரதிநிதிகளும் பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி சமத்துவ மக்கள் கட்சி போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அக் கட்சியின் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

இலங்கையில் நடந்தேறிய இனப்படுகொலைகளைத் தொடர்ந்து இலங்கை அரசின் மீது குறிப்பாக இலங்கை ஜனாதிபதி மஹிநத ராஜபக்ஷ மீதும் குற்றச்சாட்டுகள் உலகெங்கிலும் இருந்து வருகின்றன. தமிழக சட்டப் பேரவையிலும் முதல்அமைச்சர் இதுவிடயத்தை வலியுறுத்தி வரலாற்றுச சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி உலகத்தமிழர்கள் அனைவரது ஒட்டுமொத்த உணர்வுகளையும் உலகுக்கு உணர்த்தி இருக்கிறார். இந் நிலையில் இரண்டு தினங்களுக்கு முன்பாக சனல் 4இல ஒளிபரப்பப்பட்ட இசைப் பிரியாவின் கொடூர மரணம் கல்மனங்களைக் கூட கரைய வைப்பதாக இருந்த நிலையில் மத்திய அரசின் மெத்தனம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாக உள்ளது.

எனவே மத்திய அரசின் போக்கைக் கண்டித்தும், இலங்கையில் நடைபெற உள்ள இம் மாநாட்டில் இந்தியப் பிரதமரும், இந்தியாவின் பிரதி நிதிகளும் பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும், சமத்துவ மக்கள்கட்சியின்சார்பில்தமிழகத்தின் அனைத்து மாநகராட்சிகளிலும்கண்ட டங்கள்எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என அதில் கூறப்பட்டுள்ளது. (2)

பாரதச் செய்தி



**தீபாவளி பண்டிகையையொட்டி இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான வீதி வழி எல்லைப் பகுதியான வாகா எல்லைக் கோடு அருகே பாகிஸ்தான் வீரர்களுக்கு இந்திய வீரர்கள் இனிப்புக்களை வழங்கி மகிழ்விப்பதைப் படத்தில் காணலாம். இந்தியாவின் பாரம்பரியமும் பிரசித்தியும் பெற்ற இனிப்பு வகைகளை இந்தியா பாக். வீரர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.**

ஆடு நனைகிறது என்று
ஓநாய் அழுததாம்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இறைவன் என்னிடம் வந்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால்...

இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பான காணொளியை கடந்த சில தினங்களுக்கு முன்னதாக சனல் 4 வெளியிட்டிருந்தது.

காணொளிக்காட்சியினைக் கண்ட மனிதங்கள் நெட்டூரத்தின் அகோரங்கண்டு இதயத்தால் அழுதன.

என்ன செய்வது! தமிழர்கள் என்ற பெயரால் அவல மரணங்களை எங்களினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

உலக நாடுகளும் உதவுவதாக இல்லை. நம் தமிழகம் எங்களுக்காக, கொதித்தெழுந்தாலும் அந்த உணர்வை உணர்ந்துகொள்ளும் சிற்றறிவும் எங்களுக்குக் கிடையாது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இரண்டாவது தடவையாகத் தீர்மானம் கொண்டு வந்த போது, அதனை இந்தியா ஆதரிக்க வேண்டும் என தமிழகத்தில் உள்ள லொயலாக் கல்லூரி மாணவர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்நேரத்தில் எங்கள் மாணவர்கள் கிரிக்கெட் போட்டிக்காக சந்திகளில் நின்று கூத்தாடினர். எப்படி இருக்கிறது நிலைமை?

எங்கள் அறியாமையும், சுயநலமும் எங்கள் இனத்தை வேரறுக்கும் துயரங் கண்டு தாளமுடியவில்லை.

இசைப்பிரியாவின் கொலை தொடர்பில் சுயாதீனமான விசாரணை தேவை என்று பலதரப்பும் கோரிக்கை விட்டிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

குறிப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் இசைப்பிரியாவின் கொலை தொடர்பில் சுயாதீன விசாரணை தேவை என்று ஜனாதிபதியிடம் கேட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஈழத்தமிழர்களுக்காக இவர்கள்தான் கதைக்க முடியும் என்ற ஒரு எல்லையை தமிழ்த்தேசியம் அல்லது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற ஒரு குறிப்பிட்ட போலிதாரர்கள் வகுத்துக் கொண்டு தாங்களே தமிழ்த் தேசியத்தின் உரித்தாளர்கள் என்பது போல காட்டிக் கொள்கிறார்கள்.

உண்மையில் விடுதலைப்புலிகளை ஆதரித்தவர்களில் ஒரு பகுதியினரே பின்னர் அரசுடனும் படைத்தரப்பினருடனும் அதீத பற்று வைத்து செயற்பட்டார்கள்.

அதேநேரம் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அவர்களை நேரிய மனப்பாங்குடன் விமர்சித்தவர்கள் இன்றும் தமிழ்ப் பற்றில் – தமிழ்த் தேசியத்தில் மிக இறுக்கமான விசுவாசத்துடன் இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே எங்கள் தொடர்பில் எங்களுக்காக யார் குரல் கொடுத்தாலும் அவர்களை வரவேற்பது எம் கடமை. அது சிங்கள, முஸ்லிம் மக்களாக – அரசியல்வாதிகளாகக் கூட இருக்கலாம்.

ஏனெனில் இன்று தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொள்பவர்கள் தமிழர்களுக்குச் செய்த நாசகாரங்களே அதிகம்.

எனினும் அவர்கள் தமிழ்த் தேசியம் என்ற போர்வையால் தங்கள் ஈனச் செயல்களை மறைத்துக் கொள்கின்றனர்.

எதுவாயினும், இறைவன் எனக்கு முன் தோன்றி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால்,

சுவாமி! விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒரு தடவையேனும் வட பகுதிக்கு அழைத்து வாருங்கள்.

இப்போது தமிழ்த் தேசியம் பேசுபவர்களில் உண்மையானவர்கள், போலியானவர்கள் யார் என்பதை அவர் சுட்(டி),(டு)க்காட்டுவார்.

இந்த உதவியை நீங்கள் செய்தால் அது போதும் எங்கள் இனம் உய்வுபெறுவதற்கு.

# அரச காணி பிணக்குகளை தீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய இன்று அநுராதபுரத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் நாளை புதன்கிழமையும் மன்னார், வவுனியா மாவட்டங்களின் பிரச்சினை தொடர்பில் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் அநுராதபுரத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வடமாகாண காணி ஆணையாளர் எஸ். தயானந்தா மற்றும் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களும் அறிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2013/1 இலக்க காணி சுற்று நிருபத்திற்கு அமைவாக அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகள் தொடர்பில் பிரதேச செயலாளர்களால் தீர்வுகள் காண முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பிரதேச செயலாளர்கள் இவ்வாறான பல இடங்களில் கொள்கை ரீதியிலான பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் அவ்வாறான பிணக்குகளை எவ்வாறு கொள்கை ரீதியாக தீர்த்து வைப்பது என்பது தொடர்பில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒருபயிற்சிக் கலந்துலையாடலே அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

அதன்படி இன்று செவ்வாய்க் கிழமை யாழ். மாவட்ட காணி தொடர்பான பிணக்குகளும் புதன்கிழமை கிளிநொச்சி, முல்லலைத்தீவு மாவட்ட காணி பிணக்குகளும் வியாழக்கிழமை மன்னார், வவுனியா மாவட்ட காணிப்பிணக்குகளும் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், இவ்வாரம் அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் காணி தொடர்பான கூட்டம் பிரதேச செயலாளர்களால் தீர்வுகள் காணமுடியாத அரச காணிகள் தொடர் பான பிணக்குகளுக்கு கொள்கை ரீதியாக எவ்வாறு தீர்வுகளைக் காண்பது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

மாறாக இக்கூட்டம் காணி சுவீகரிப்பு சம்பந்தமானது அல்ல என திட்டவட்டமாக கூறமுடியும்.

கடந்த 30 வருடங்களாக வடக்கில் காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பது சம்பந்தமான ஒரு பயிற்சிக் கூட்டமாகவே 5,6,7 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் இக்கூட்டம் நடக்கவிருக்கிறது என்றார்.

அதேவேளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிக்கையில்,

நீதியமைச்சின் கீழ் உள்ள இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவானது வடக்கு கிழக்கில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகளை தீர்க்கின்ற போது பிரதேச செயலாளர்கள் கொள்கை ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

தான் குடியிருக்கும் அரச காணியை வேறொருவருக்கு விற்பனை செய்வது மிகக்குறுகியகாலத்திற்குள்அரசகாணியை பிடித்து குடியிருப்பது உள்ளிட்ட பிணக்குகளுக்கு எவ்வாறு தீர்வுகளை காண்பது தொடர்பில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு இந்தக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது எனத் தெரிவித்தார். (அ-6)

## பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு
# அமைச்சர்கள், எம்.பிக்கள் வெளிநாடு செல்லத் தடை

பொதுநலவாய நாடுகளின் மாநாடு, வரவு செலவுத் திட்டம் என்பன நடைபெறவுள்ளதால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளும் கட்சியின் அலுவலகம் நாடாளுமன்றத்தில் அங்கம வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு எதிர்வரும் 15-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை நடைபெறும்.

இதனையடுத்து 2014 ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 21-ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவா. தங்கள் டிசம்பர் மாதம் 21-ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

அதேவேளை மேற்படி இரண்டு மாதங்களில் அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோரும் வெளிநாடு செல்வதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. (எ-11)

# படகு கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

படகு கவிழ்ந்ததில் கடற்றொழிலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இவருடன் சென்ற ஏனைய மூவர்நீந்திக்கரையை வந்தடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இதில் யாழ். பாஷையூரைச் சேர்ந்த க. சிவலிங்கம் என்ற 52 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பாஷையூர் கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6)

# ஆட்டோ தடம் புரண்டு கடலுக்குள் பாய்ந்தது
## பண்ணை வீதியில் சம்பவம்

கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ பண்ணைக் கடலினுள் பாய்ந்ததில் மூவர் சிறுகாயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஊர்காவற்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்து கொண்டிருந்தபோது மண்டைதீவுச் சந்திக்கு அண்மையில் குறித்த ஆட்டோ கடலினுள் பாய்ந்துள்ளது.

இதில் ஆட்டோ பலத்த சேதங்களுக்கு உள்ளானதோடு அதில் பயணித்த சாரதி உட்பட மூவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

பலத்த மழை பெய்து கொண்டிருந்த போது இந்த விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்
## கடவுளுக்கு விருப்பமானவன்



❖ மனிதனுக்கு கடவுள் அளித்திருக்கும் இந்த உடல் மகத்தானது. அதை ஒரு நரகக் குகையாக ஆக்குபவன் மன்னிக்க முடியாத குற்றவாளி.

❖ யாரைப் பற்றியாவது கோள்மூட்ட ஒருவன் வந்தால் அதற்கு சிறிதும் செவி சாய்ப்பது கூடாது. பிறரைப் பற்றிய தவறான விடயங்களைக் கேட்பது பெரும்பாவம்.

❖ மனத்தளர்வு வெற்றிக்கு வழிவகுக்காது. எப்போதும் உள்ளத்தில் உறுதியும் உதட்டில் புன்னகையும் கொண்டிருப்பவனே கடவுளுக்கு விருப்பமானவன்.

❖ நற்செயலில் ஈடுபடுபவருக்கு கைகொடுக்க தயாராகுங்கள். ஒவ்வாரு மனிதனையும் உங்களின் சகோதரராக நடத்துங்கள்

❖ தன்னலத்துடன் வாழ்பவன் புண்ணியத்தலம் அனைத்தையும் தரிசித்தாலும்கூட கடவுளுக்கு மிகத் தொலைவில் இருப்பவனே.

❖ அடக்கப்படாத மனம் மனிதனை கீழ்நோக்கி இழுத்து சென்று விடும்.

# நியூசிலாந்தை வெள்ளையடித்தது பங்களாதேஷ்

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும், 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3-0 என்ற ரீதியில் நியூசிலாந்தை வெள்ளையடிப்பு செய்தது பங்களாதேஷ் அணி . பொறுப்பாக ஆடிய நியூசிலாந்து வீரர் ரொஸ் டெய்லரின் சதம் வீணானது.

பங்களாதேஷ் சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, 2-0 என ஏற்கனவே தொடரை தன் வசப்படுத்தியது. மூன்றாவது போட்டி பதுல்லாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில்வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆன்டன் தேவ்சிச் (46), டாம் லதாம் (43) ஜோடி நல்லஆரம்பத்தைக் கொடுத்தது. அடுத்து வந்த கிராண்ட் எலியாட் (3) ஏமாற்றினார். பின் இணைந்த ரொஸ் டெய்லர், கோலின் முன்ரோ ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. பங்களாதேஷ் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய டெய்லர், ஒருநாள் போட்டியில் தனது 8ஆவது சதம் அடித்தார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்பு தந்த முன்ரோ, 2ஆவது அரைசதத்தை பதிவு செய்தார். நான்காவது விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் சேர்த்தபோது முன்ரோ (85) ஆட்டமிழந்தார். கோரி ஆண்டர்சன் (1) நிலைக்கவில்லை.




இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 307 ஓட்டங்களை பெற்றது. ரெய்லர் (107), ரோஞ்சி (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு ஜியார் ரஹ்மான் (22) சுமாரான ஆரம்பத்தைக் கொடுத்தார். மோமினுல் ஹக் (32) நிலைக்கவில்லை. அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் (2) ஏமாற்றினார். பின் இணைந்த ஷாம்சுர் ரஹ்மான், நயீம் இஸ்லாம் ஜோடி அபாரமாக ஆடியது. நியூசிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்த ஷாம்சுர் அரைசதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 75 ஓட்டங்கள் சேர்த்த போது, ஷாம்சுர் (96) சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து வெளியேறினார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த நயீம் இஸ்லாம் (63) "ரன்-அவுட்" ஆனார். மகமதுல்லா (16) ஏமாற்றினார்.

இறுதி ஓவரில் ஓவரில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், சோஹாக் காஜி பவுண்டரி அடிக்க, பங்களாதேஷ அணி 49.2 ஓவரில்6 விக்கெட்டுக்கு 309 ஓட்டங்களைஎடுத்து வெற்றிபெற்றது. நசீர்ஹொஸைன் (44), சோஹாக் காஜி (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 3-0 என தொடரை முழுமையாக கைப்பற்றி, கிண்ணத்தை வென்றது. ஆட்ட நாயகன் விருதை பங்களாதேசின் ஷாம்சுர் ரஹ்மான் கைப்பற்றினார். தொடர் நாயகன் விருது பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிமுக்கு வழங்கப்பட்டது.

## 3 இந்திய வீரர்களால் 3 இரட்டைச் சதங்கள் 3 அணிகளுக்கெதிராக ...

1971ஆம் ஆண்டு முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. ஒரு நாள் கிரிக்கெட்டில் இரட்டை சதம் அடிப்பது 'எட்டாக்கனியே' என்பது தான் ஒரு காலத்தில் அனைத்து தரப்பினரின் வாதமாக இருந்து வந்தது ஆனால் 20 ஓவர் கிரிக்கெட் அறிமுகம் ஆன பிறகு நிலைமை அப்படியே தலைகீழாக மாறி விட்டது.

'அதிரடி...சரவெடி..' என்ற 20 ஓவர் கிரிக்கெட்டின் 'வேகம்' ஒரு நாள் போட்டியிலும் முழுமையாக ஊடுருவி விட்டது. விளைவு...ஒரு நாள் கிரிக்கெட்டில் முடியாதது என்று சொல்லப்பட்ட இரட்டை சதமும் ஒன்றல்ல...இரண்டல்ல...மூன்று முறை இப்போது நிகழ்த்தப்பட்டு விட்டது. அதுவும் இந்திய வீரர்களாலேயே அந்த மூன்று சாதனைகளும் அரங்கேற்றப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக சச்சின் டெண்டுல்கரும் (200 ஓட்டங்கள், 147 பந்து, 25 பவுண்டரி, 3 சிக்சர்) 2011ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக ஷேவாக்கும் (219 ஓட்டங்கள், 149 பந்து, 25 பவுண்டரி, 7 சிக்சர்), இப்போது ரோகித் ஷர்மாவும் (209 ஓட்டங்கள், 158 பந்து, 12 பவுண்டரி, 16 சிக்சர்) இரட்டை சத நாயகர்களாக ஜொலித்துள்ளனர்.

இதில் இன்னும் சில அதிசயமான ஒற்றுமைகளும் உள்ளன. மூன்று இரட்டை சதங்களும் இந்திய மண்ணிலேயே நிகழ்ந்துள்ளது. மூவரும் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கியவர்கள். மூன்று சாதனைகளும் மூன்று அணிகளுக்கு எதிராக மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

## ஜடேஜாவுக்கு அபராதம்

அவுஸ்திரேலிய வீரர் ஷான் வொட்சனை அவதூறாக பேசியதற்காக இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் நடைபெற்ற இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 7ஆவது ஒருநாள் போட்டியில், இந்திய அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் ஐசிசி நடத்தை விதி முறைகளின்படி ஜடேஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் 29ஆவது ஓவரின்போது வொட்சனை ஆட்டமிழக்கச் செய்தார் ஜடேஜா. அப்போது ஜடேஜா, வொட்சனைப் பார்த்து அவதூறான வார்த்தையைப் பிரயோகித்ததாக கூறப்படுகிறது.

போட்டியின் முடிவில் தான் அவதூறாகப் பேசியதை ஜடேஜாவும் ஒத்துக் கொண்டார்.

மேலும் இதுதொடர்பாக போட்டி நடுவர் ஆண்டி பைகிராப்ட் பிறப்பித்த தண்டனையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

மேலும் களநடுவர் நிகல் லாங்கிடமும் அவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து ஜடேஜாவின் போட்டிக் கட்டணத்தில் 10 சதவிகிதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## பெடரரை வீழ்த்தி ஜோகோவிச் சம்பியன்

பாரிஸ் மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டியில் சேர்பியாவின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார். பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் டேவிட் பெடரரை (ஸ்பெயின்) எதிர்கொண்ட ஜோகோவிச், 7-5, 7-5 என்ற நேர்செட்களில் எளிதாக வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் மற்றொரு ஸ்பெயின் வீரர் நடாலை முந்தி அந்த இடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு ஜோகோவிச்சுக்கு அதிகரித்துள்ளது. பாரிஸ் மாஸ்டர்ஸ் தொடரில் தொடர்ந்து இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையை தனதாக்கிக்கொள்ள டேவிட் பெ்டரர் தீவிர முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

## 'மக்களின் மனம் கவர்ந்த வீரர்' விருதுக்கு தோனி, ஹோலி பெயர்கள் பரிந்துரை



ஐ.சி.சி., 'மக்களின் மனம் கவர்ந்த வீரர்' விருதுக்கு, இந்திய அணித் தலைவர் தோனி, விராட் ஹோலி ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.,) சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர்களுக்கு விருது வழங்கப்படும். இந்த ஆண்டுக்கான 'மக்களின் மனம் கவர்ந்த வீரர்' விருதுக்கான பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் இந்திய அணித் தலைவர் தோனி, விராட் ஹோலி ஆகியோரது பெயர்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஆண்டு, ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரருக்கான விருது ஹோலிக்கு கிடைத்தது. கடந்த 2008, 2009இல் ஒரு நாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரருக்கான விருது தோனிக்கு வழங்கப்பட்டது.

இவர்களை தவிர, அவுஸ்திரேலிய அணித தலைவர் மைக்கல் கிளார்க், தென்னாபிரிக்க ஒருநாள் அணி தலைவர் டிவிலியர்ஸ், இங்கிலாந்து அணித் தலைவர் அலெஸ்டர் குக் ஆகியோரது பெயர்களும் 'மக்களின் மனம் கவர்ந்த வீரர்' விருதுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இந்த விருதுக்கான வீரர்களை, ஐ.சி.சி., கிரிக்கெட் சபைத் தலைவர், இந்திய அணியின் முன்னாள் தலைவர் அனில் கும்ளே தலைமையிலான ஐந்து பேர் கொண்டு குழு தேர்வு செய்தது. இப்பட்டியல், ஐ.சி.சி., இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதிலிருந்து ரசிகர்கள் தங்களுக்கு பிடித்த ஒரு வீரரை தேர்வு செய்யலாம். வீரர்களை தேர்வு செய்ய, கடைசி திகதியாக எதிர்வரும் நவ., 23ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முடிவுகள் வரும் டிசெ., 13ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.சி.சி., விருது வழங்கும் நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டு, விருது வழங்கப்படும்.

கடந்த 2010இல் இந்த விருது முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில், இந்திய அதிரடி துடுப்பாட்ட வீரர் சச்சின் தேர்வு செய்யப்பட்டார். அடுத்த இரண்டு ஆண்டுகள் (2011, 12) இலங்கையின் சங்ககராவுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த ஒருநாள் போட்டி வீரர, டெஸ்ட் வீரர் உள்ளிட்ட மற்ற விருதுகளுக்கான வீரர்கள் பட்டியல், எதிர்வரும் நவ., 11ஆம் திகதி மும்பையில் அறிவிக்கப்படும்.

# தேசிய மட்ட கபடிப் போட்டி

# நெல்லியடி ம.ம.வித்தி பெண்கள் அணி சம்பியன்

இலங்கை பாடசாலைகள் கபடிச்சங்கம் நடத்திய, தேசிய ரீதியான கபடிப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பெண்கள் அணி சம்பியனானது.

இப்போட்டி நேற்று தமுத்தேகம மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ்இறுதிப் போட்டியில் காலி அமரசூரிய பெண்கள் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பெண்கள் அணி மோதியது.

இதில் 37 - 17 என்ற புள்ளிகள் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பெண்கள் அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இதேவேளை, தேசிய ரீதியான கபடிப் போட்டியில் 16 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

கேகாலை மயூரபால மத்திய கல்லூரியை எதிர்த்து விளையாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 18 - 16 என்ற புள்ளிகள் கணக்கில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. (24)

## உதைபந்தாட்ட இன்றைய போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில்,

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை யங்கம்பன்ஸ் அணியும் மோதவுள்ளன. (24)



ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்திய 9 பேர் 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் சுழிபுரம் கற்பகசோலை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இவ் இறுதிப் போட்டியில் சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து வட்டு றைனோஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் சம்பியனான சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழக அணியினரைப் படத்தில் காணலாம்.


union assurance

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 25 வருடங்களை பூர்த்தி செய்துள்ள யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் புதிய சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்

- காப்புறுதி ஆலோசகர் (I.A)
- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் (S.P.F.I)
- சிரேஷ்ட தனிப்பட்ட நிதி முகாமையாளர்

**மேற்படி பதவிக்கான தகைமைகள்**

- க.பொ.த சா/ தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாரும்
- விளையாட்டுத் துறையில் திறமை உள்ளவர்கள்
- உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை உள்ளவர்கள்

**மேற்படி பதவிக்கான நன்மைகள்**

- Allowance 3,000 தொடக்கம் 15,000/= ◆ Commission
- மடிக்கணனி மூன்று மாதங்களுக்கு பிறகு
- மோட்டார் வாகனக் கடன் 170,000/- 6 மாதங்களிற்குப் பிறகு
- வீட்டுக் கடன் ஒரு வருடத்திற்குப் பிறகு

- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்(A.D.O)
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர்(A.D.M)

**மேற்படி பதவிக்கான நன்மைகள்**

- மேற்படி பதவிக்கான Basic Allowance 10,000/=
- மற்றும் மேலதிக Allowance 29,000/= வரை
- மோட்டார் வாகனக் கடன் 1700000 வரை
- மடிக்கணனி (Laptop) ◆ வீட்டுக் கடன்

**மேற்படி பதவிக்கான தகைமைகள்**

- எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஒரு வருட காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன்அனுபவமுள்ளவர்களும், குழு முகாமைத்துவம் செய்யக்கூடியவர்களும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.

**காலம்: புதன்கிழமை (06.11.2013) நேரம்: மு.ப. 10.00 மணி.**

**இடம்: யூனியன் அசூரன்ஸ்**

**இல.160 1/6, K.K.S வீதி, சுன்னாகம்.**

தொடர்புக்கு: **021 224 2097**

(ச-5379)


# பஸ் மோதி மின்கம்பம் சரிந்தது




புங்குடுதீவு மடத்து வெளியில் கட்டுப்பாட்டையிழந்த பஸ் ஒன்று மின் கம்பத்தை முட்டி மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதிவேக மின்சாரம் பாயும் மின்கம்பத்துடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. எனினும் அதில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் மின்கம்பி பஸ்ஸின் மீது விழுந்திருந்தால் அதிலிருந்தவர்கள் ஆபத்தை எதிர்கொண்டிருப்பர் என்பது குறிப்பிடத் தக்கது. (எ)

# இந்திய வெற்றியில் கரும்புள்ளி!

## அநாகரிகமாக நடந்த தவான்!



அவுஸ்திரேலியாவை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய அணி தொடரை கைப்பற்றியது.

இந்த போட்டியில் எதிரணி வீரர் ஒருவரை ஷிகர் தவான் கிண்டல் செய்துள்ளார்.

5 ஓவர்கள் பந்து வீசிவிட்டு ஷேன் வோட்சன் காயம் காரணமாக மேலும் வீச முடியாமல் வெளியேறினார்.

பிறகு துடுப்பெடுத்தாடும் போது நம்பர் 8-இல் களமிறங்கினார். அப்போது அவுஸ் திரேலியா 6 விக்கெட் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஷேன் வோட்சனால் விந்தி விந்திதான் ஓட முடிந்தது. புதிய விதிகளின் படி பை-ரன்னர கிடையாது.

இந்த நிலையில் முதல் பந்தை பஞ்ச் செய்தார், தவான் அதனைப் பிடித்தார்.


அதோடு நில்லாமல் மிகவும் காயமடைந்து முடியாமல் விந்தி விந்தி சென்ற வோட்சனை அசிங்கமாக கேலி செய்வது போல் அதே போல் தானும் விந்தி விந்தி நடந்து செய்கை செய்தார்.

காயமடைந்த வீரரை கேலி செய்தது அநாகரிகமான செயலாகும்.

இந்தியா பெற்ற அபார வெற்றியில் தவானின் நடத்தை ஒரு கரும்புள்ளியாக அமைந்துள்ளது.

# ஆஷஸ் தொடரில் பங்குபற்றுவேன்;

## ஆஸி வீரர் வோட்சன் நம்பிக்கை



தனக்கு ஏற்பட்டுள்ள பின்தொடைத் தசைநார் உபாதை தொடர்பாக அதிக அச்சம் காணப்படவில்லை என அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வோட்சன் தெரிவித்துள்ளார். அத்தோடு ஆஷஸ் போட்டிகளில் பங்குபற்றும் நம்பிக்கையும் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் பங்குபற்றிய ஷேன் வோட்சன் அதன் 7ஆவது போட்டியில் பந்துவீசும் போது பின்தொடைத் தசைநார் உபாதைக்கு உள்ளானார். உடனடியாக அவர் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

அவுஸ்திரேலிய அணி பின்னர் துடுப்பெடுத்தாடும்போது ஷேன் வோட்சன் துடுப்பெடுத்தாடியிருந்ததோடு அதிரடியாக 49 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். ஆனால் அவரது உபாதை தொடர்பான அச்சம் தொடர்ந்தும் காணப்படுகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஷேன் வோட்சன், அவுஸ்திரேலியாவிற்கு திரும்பியதும் ஸ்கான் பரிசோதனைக்கு உள்ளாகவுள்ளதாகவும் அதன் பின்னரே தனது உபாதை தொடர்பாக மருத்துவ முடிவு கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிட்டார்.

ஆஷஷ் தொடர் ஆரம்பிக்க இன்னமும் 2 வாரங்களுக்கு அதிகமாகக் காணப்படும் நிலையில், அதற்கு முன்னதாக போதிய ஓய்வெடுத்து முதலாவது போட்டிக்காகத் தன்னால் தயாராக முடியுமென நம்பிக்கை வெளியிட்ட வோட்சன், தனக்கு அந்த நம்பிக்கை சிறப்பாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# வலி வடக்கில்...

வும் காணிகள் அந்தத் திணைக்களத்திற்கு அர சாங்கத்தினால் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டதனால் அதனை பகிர்ந்தளிக்கும் அதிகாரம் அந்த திணைக்களத்திற்கு உள்ளது. ஆனால் நிச்சயம் அந்தக்காணிகளில் வீடுகள் அமைத்து கொடுக்கப்படும்போது அறிவிக்கத்தான் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசகாணிகள் பங்கிடும்போது அரசாங்க அதிபரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் இந் தக்காணி அவ்வாறில்லை ஏற்கெனவே அரசாங்கத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு விட்டதனால் அரசாங்க அதிபருக்கு அறிவிக்க வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகவியலாளரகளைச் சந்தித்தபோது ஊடகவியலாளர்களினால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் வலி.வடக்குப்பகுதியில் வீடுகள் இடித்தழிக்கப்படுவது தொடர்பில் அலுவலக ரீதியாக அறிவித்தல்கள் எதுவும் வழங்கப்பட வில்லையென்றும் தெரிவித்தார்.

பத்திரிகைகள் வாயிலாகத்தான் அந்தச் சம்பவம் பற்றி அறிந்து கொண்டேன். அத்தோடு உயர் மட்ட ரீதியில் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதால் தான் அதில் தலையிடவில்லையென்றும் அரசியல் விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் தலையிட முடியாது எனவும் நழுவல் போக்குடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அரசாங்க அதிபர் பதிலளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# நெருக்கடியில்...

மத்திய அமைச்சரவை இந்த விவகாரத்தில் இரண்டுபட்டுள்ளது.

இதனால், பொதுநலவாய மாநாடு தொடர பாக முடிவெடுப்பதில் மன்மோகன் சிங்கிற்கு கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (செ-11)

## காணொளிக் காட்சி...

அமைச்சர் டக்ளஸ் விசாரணை நடத்துமாறு கூறுகிறார். அந்த காணொளி போலியானது இல்லையென்றால் மட்டும் விசாரணை நடத்த வேண்டும் என நாங்கள் கூறுகிறோம்.

சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பனாலே எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. இராணுவம் இது போலியானது என தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியதை காணமுடிந்தது.

அந்த காணொளி போலியானது என்று ஆய்வுகளில் தெரியவந் தால் அது பற்றி விசாரணைகளை நடத்த வேண்டியதில்லை.

அதனை விடுத்து இராணுவத்தினர் அல்லது தனிப்பட்ட இராணுவ வீரருக்கு எதிராக உண்மையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அது பற்றி விசாரணை நடத்தி இராணுவத்தின் மதிப்பை தற்காத்து கொள்ள வேண்டும் என்றார். (எ-11)


**vacancyes**

JOB ! JOB ! JOB ! 0772712511 0214993166



நீங்கள் O/L பயின்றவரா? இவ் இலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.

**நிர்வாக அதிகாரி , செயல்திட்ட அதிகாரி , அலுவலக உதவியாளர், மேற்பார்வையாளர்.**

அனுபவம் அவசியமற்றது. தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.

- பயிற்சிக்காலம்- 12,000/=, 15,000/=
- பின் குறைந்தது - 45,000/=

(4422)



**கணினி விற்பனை**

| HP Branded PC | HP Branded PC |
|---|---|
| Core2Duo 2.13 GHz | Dual Core 2.5 GHz |
| 2GB RAM | 1GB RAM |
| 160 GB HDD | 80 GB HDD |
| 256 MB VGA | 128 MB VGA |
| DVD ROM | DVD ROM |
| 17" LCD Monitor | 17" LCD Monitor |
| Keyboard, Mouse | Keyboard, Mouse |
| 26500/= | 22500/= |

CIT Computers & Office Automation
Tel: 0772487778, 0778885449
(உத்தரவாதம் வழங்கப்படும்)
(4418)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் திருமதி நகுலாம்பிகை நடராசா**



தோற்றம் 08 - 04 - 1935

மறைவு 15 - 11 - 2012

திதி : துதியை

எம்மை பெற்று வளர்த்த எம் அன்னையே
உங்கள் சிரித்த முகம் காணாது தவிக்கின்றோம்
ஆண்டொன்று ஆனாலும் தாயே
ஆறவில்லை எம் துயரம் உம்மைப் பிரிந்து
நித்தம் நித்தம் ஏங்கி அழுகின்றோம்
நீங்கள் திரும்பி வர மாட்டீர்களா அம்மா?
நிழலாக எம் மனங்களில் குடிகொண்ட தாயே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கஜன் கொன்ஸ்ரக்ஷன்
205, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
- குடும்பத்தினர் -

(4417)


**வெளிவந்துவிட்டது.**

2014, 2015 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான...

வினாத்தாள் I இல் 100% மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்வதற்கான

DVD + நூல்

1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான விளக்கமும்

கிடைக்கும் இடம்–
- அன்னை புத்தகசாலை– யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை– யாழ்ப்பாணம்.
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை–நெல்லியடி.

தொடர்புகளுக்கு- 0719003171

(ஏ-5377)



**வாடகைக்கு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மித்த தெல்லிப்பளை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட சமையலறை, சாப்பாட் டறையுடன் மேலும் நான்கு அறைகள் கொண்ட தளபாடங்களுடன் கூடிய வசதி யான வீடு. இதற்கு மேலதிகமாக வீட்டுடன் இணைந்த TUITION நடத்தக் கூடிய 34'-0" x 11'-6" கட்டட வசதியும் உண்டு. வீட்டை நன்கு பேணக் கூடிய குடும்பத்திற்கு மட்டும். உடனடி யாகக் குடிபுகக் கூடிய நிலையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:

**0773753094, 0772035419**

(4412)


## ஐ.தே.கவின் ...

சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க, லக்ஸ்மன் கிரியெல்ல, கபிர் காசிம், தலதா அத்துகோரளை, திஸ்ஸ அத்த நாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த கால தேர்தல் தோல்விகளை அடுத்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்று இடம் பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்த பரிந்துரைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ குழுவில் இருந்து சஜித் பிரேமதாஸ விலகியுள்ளார்.

தலைமைத்துவ குழுவில் குறைப்பாடுகள் இருப்பதாக கூறியே அவர் அதில் இருந்து விலகியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் நேற்று மாலை தலைமைத்துவக் குழுவுக்கு கட்சியின் செயற்குழு ஒப்புதல் வழங்கியது.

இதில் கரு ஜெயசூரியவின் தலைமையிலான குழுவில் சஜித் பிரேமதாஸ உட்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தேசிய தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் தற்போது சஜித் பிரேமதாஸ தாம் குழுவில் இருந்து விலகி யுள்ளதாக அறிவித்துள்ளார். (எ-11)

## கருமன் பயண...

செல்வது அவர் கட்சியின் செல்வாக்கை குழிதோண் டிப் புதைப்பதற்கு சமமாகும். தமிழர்கள் மத்தியில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு இருந்து வந்த ஆதரவு குறையும் நிலை தோன்றியுள்ளது. (எ-11)

## இந்தியப் பிரத...

விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்.

அதேபோன்று, இலங்கையின் இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வைக் காணவும், இலங்கை அரசாங்கத்துடனான இடைவெளியைக் குறைக்க வும் இந்தியப் பிரதமரின் கொழும்புப் பயணம் உதவும் என சவுத் புளொக் நம்புவதாகவும் தெரியவந் துள்ளது.

ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் இம்மா நாட்டில் கலந்து கொள்வதற்கு இந்தியப் படைத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி எதிர்ப்புத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் உலகம் முழுவதும் உள்ள 9 கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் மத்திய அமைச்சரவையின் பாதுகாப்புக் குழு பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்திய அமைச்சரவையில் மிகவும் முக்கிய மானவரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் களில் ஒருவருமான அந்தோனியின் இந்த நிலைப்பாடு இந்திய அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (எ-11)


**உலகம் முழுவதும் 73 மில்லியன் வேலைவாய்ப்புக்கள்***

*HiltonWorlwide.com/Youth, World Tourism Organization







உலகெங்கும் சுற்றும்
அமெரிக்க உல்லாசப் பயணக் கப்பல்கள்

**வேலைவாய்ப்பு உத்தரவாதமான வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சி**

- பயிற்சிக் காலத்தில் ஒரு இலட்சம் வரையான வருமானம்
- பயிற்சி நிறைவில் Work Permit உடன் வேலைவாய்ப்பு
- UK, Australia, Canada, ஐரோப்பிய நாடுகளில் செட்டில் ஆகும் வாய்ப்பு

**SPOT ADMISSION**
முதல் 10 அனுமதிகளுக்கு
**25% கட்டணக்கழிவு**

வெளிநாட்டுப் பிரதிநிதி Ryan Kok நேரடியாகப் பங்கேற்கும்
**விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி**

நவம்பர் 08 வெள்ளி மாலை 2மணி **யாழ். சிகரம் மண்டபம்**
நவம்பர் 09 சனி காலை 9 மணி **கிளிநொச்சி சோலைவனம்**
பிற்பகல் 2 மணி **வவுனியா நெல்லி ஸ்ரார்**
நவம்பர் 10 ஞாயிறு காலை 10 & பிற்பகல் 2 மணி **கொழும்பு தமிழ்ச்சங்கம்**

**குறிப்பு:** இதுவரை சென்ற 4 அணி மாணவர்களையும் சிகரம் பணிப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்கான தொழில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்



வேலைவாய்ப்புடனான பயிற்சியை வழங்கும் SEGi பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன்



Skills Malaysia INVITE அரசாங்க பிரதிநிதியுடன்



வருமானத்துடனான பயிற்சியை நிறைவுசெய்து வேலைவாய்ப்பை பெறவுள்ள மாணவர்களுடன்

**அனுமதி இலவசம்**

முற்பதிவுகளுக்கு
**077 36 16 798**
**021 222 00 11**

**சிகரம்** கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)

(சி-5360)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.